Follow us:

# தமிழன்
THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 01, இதழ் : 60 சார்வரி வருடம், ஆவணி மாதம் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை (11.09.2020) ஹிஜ்ரி - 1442, முஹர்ரம் பிறை - 22, 0115886187 பக்கங்கள் 12 விலை ரூ.20

## ஐ.தே.க.வின் விசேட கூட்டம்

ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை கூடவுள்ளது.

இதன்போது அந்தக் கட்சியின் பிரதித் தலைவர் நியமனம் குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படுமென்று தெரிவிக்கப்படுகின்றது.

### நக்கல்நமசிவாயம்




## எந்த நாட்டையும் - அமைப்பையும் குறிப்பிட்டு எதனையும் சொல்லவில்லை

### 'தமிழன்' செய்தி தொடர்பில் ஹக்கீம் விளக்கம்



நேற்றைய 'தமிழன்' பத்திரிகையில் வெளியான, 'ஹக்கீம் கூறும் வெளிநாட்டுச் சக்தி 'றோ' வா?' என்ற தலைப்பில் வெளியான செய்திக்கு தனது பக்க நியாயத்தை கூறி தனது ஊடகப்பிரிவின் ஊடாக விளக்க மின்னஞ்சலொன்றை அனுப்பியுள்ளார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம். அதை அப்படியே பின்வருமாறு தருகிறோம் -:

வியாழக்கிழமை 10.09.2020 'தமிழன்' பத்திரிகையில் "ஹக்கீம் கூறும் வெளிநாட்டுச் சக்தி 'றோ' வா? தீவிரமாக ஆராய்கிறது அரச புலனாய்வுத்துறை" என்ற தலைப்பில் வெளியாகியுள்ள முதற் பக்க முதன்மைச் செய்தி உண்மைக்குப் புறம்பானது என்பதையிட்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்.... 02

### அந்த மூன்றாவது சக்தி எது?
## விளக்குவாரா ஹக்கீம் எம்.பி.?

ஹக்கீம் கூறும் வெளிநாட்டுச் சக்தி 'றோ' வா? என்ற தலைப்பில் எமது பத்திரிகையில் நேற்றைய தினம் வெளிவந்த செய்தி அரச புலனாய்வுத்துறை வட்டாரங்களின் தகவல்களைக்.... 02



## சேலையில் புத்தரின் உருவம் மன்னார் தாயார் கொழும்பில் கைது!

*- நமது நிருபர் -*

கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெறும் ஒருவரை பார்வையிட மன்னாரிலிருந்து வந்த தாயொருவர் நேற்று பெரும் பிரச்சினையொன்றை எதிர்கொண்டார்.

அவர் அணிந்திருந்த சேலையில் புத்தரின் உருவம் பொறிக்கப்பட்டிருந்தமையே இந்த சிக்கலுக்குக் காரணம்.... 02



## புலம்பெயர் இலங்கையர்கள் அரசுடன் பணியாற்ற வருக!

### பிரதமர் மஹிந்த அழைப்பு!



புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்கள் மற்றும் மக்கள் அமைப்புகள் எந்தவித அச்சமுமின்றி எம்முடன் இணைந்து பணியாற்ற வரவேண்டும் என புலம்பெயர்ந்துள்ள சில முதலீட்டாளர்களை... 02

## மிலேனியம் சவால் ஒப்பந்தத்தை அமைச்சரவையில் எதிர்த்தேன்!

### சஜித் சபையில் வாதம்



அமெரிக்காவுடனான மிலேனியம் சவால் ஒப்பந்தத்தை நான் எமது ஆட்சியில் எதிர்த்தேன். அமைச்சரவையிலும் அதனை எதிர்த்தேன். ஆனால், அந்த ஒப்பந்தம் செய்தால் நாடே இரண்டாகிப் போய்விடுமென கடந்த தேர்தல்களில்.... 02

### கொரோனா நிலைமையால்
# நாடு திரும்ப முடியாமல் இலங்கையர்கள் நிர்க்கதி!

## உடனடியாக அழைத்துவர மனோ எம்.பி. சபையில் வலியுறுத்து



*- நமது சபை செய்தியாளர் -*

கொவிட் -19 எனப்படும் கொரோனா வைரஸ் தாக்க நிலைமையால் வெளிநாடுகளில் சிக்கித் தவிக்கும் சுமார் 45 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இலங்கையர்களை நாட்டுக்குள் அழைத்துவர அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் நேற்று நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோது மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்த அவர்... 02

## முன்னாள் எம்.பி.க்கள் 40பேர் இன்னும் அரச விடுதிகளில்!

சுமார் 40 முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாதிவல பகுதியிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீட்டுத் தொகுதியிலிருந்து இன்னும் வெளியேறவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், புதிதாக தெரிவாகியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வீடுகளை வழங்குவதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். 02

## சஹ்ரான் குறித்த தகவல்களை பகிர சி.ஐ.டி. தயக்கம் காட்டியது!

### தேசிய புலனாய்வுத்துறை முன்னாள் அதிகாரி சிசிர குற்றச்சாட்டு

சஹ்ரான் உள்ளிட்ட தரப்பினர் தொடர்பிலான அனைத்து புலனாய்வுத் தகவல்களையும் பகிர்ந்து கொள்வதற்கு புலனாய்வுத் தொடர்பிலான கூட்டமொன்றின்போது 2019ஆம் ஆண்டு இணக்கம் காணப்பட்ட நிலையில், மாவனெல்ல புத்தர் சிலை உடைக்கப்பட்டமை குறித்த குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அறிக்கை தமக்கு கிடைக்கவில்லை என முன்னாள் தேசிய புலனாய்வுத்துறை பிரதம அதிகாரி சிசிர மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

சஹ்ரானினால் நடத்திச்செல்லப்பட்ட வண்ணாத்திவில்லு வெடிபொருள் களஞ்சியசாலை கண்டுபிடிக்கப்பட்டதை தொடர்ந்து, புலனாய்வு அதிகாரிகளினால் நடத்தப்பட்ட விசாரணை அறிக்கை கூட தனக்கு கிடைக்கப் பெறவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியம் வழங்கியபோதே சிசிர மெண்டிஸ் இதனைக் கூறியுள்ளார். வாராந்த புலனாய்வுக் கூட்டம், பாதுகாப்பு செயலாளர் தலைமையில்... 02

## கொழும்பு நகரில் படகுச்சேவை



*அதிக மழைவீழ்ச்சியின் காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் கொழும்பு ராஜகிரிய, மாதின்னாகொட பகுதியில் படகில் பயணிக்கும் பெண்ணொருவர்.....*

படப்பிடிப்பு : பிரதீப் தம்பரகே

## ரயர் - ரியூப்களுக்கு தட்டுப்பாடு

இலங்கையில் தற்போது ரயர் மற்றும் ரியூப்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் பஸ் மற்றும் லொறி உரிமையாளர்கள் பாரிய அசௌகரியங்களை சந்தித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, ரயர் மற்றும் ரியூப் விற்பனை செய்யும் சுமார் 5000 விற்பனை நிலையங்களில் கடந்த 6 மாத காலமாக எந்தவொரு வர்த்தகமும் இடம்பெறாத நிலையும் ஏற்பட்டுள்ளது. 02

## அரச நிறுவனங்களுக்காக புதிய கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படாது

அரச நிறுவனங்களுக்கான புதிய கட்டிடங்களை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளை 2 வருடங்களுக்கு பிற்போட அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அனைத்து அமைச்சுகளின் செயலாளர்கள், இராஜாங்க அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாண சபை செயலாளர்கள், திணைக்களங்களின் பிரதானிகள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் தலைவர்களுடன் நிதி அமைச்சில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையின்போதே இந்த... 02

## 'கோபியோ' அமைப்பின் நிகழ்வில் தமிழ் முற்போக்குக் கூட்டணி புறக்கணிப்பு!

இந்திய வம்சாவளி மக்களின் உலகளாவிய அமையமென கருதப்படும் கோபியோ இலங்கைக் கிளையின் மாநாடு நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் உட்பட அதன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டிருந்தபோதும் மேற்படி நிகழ்வில் அவர்கள் புறக்கணிக்கப்பட்டதாக அறியமுடிந்தது.

கூட்டத்தின் பிரதான மேடையில் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் உட்பட்ட பிரமுகர்கள் அமரவைக்கப்பட்டபோதும், இந்திய வம்சாவளி மக்களின்.... 02

## ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஞானசாரரின் சாட்சியத்தை இரகசியமாக பதிவுசெய்ய மௌலவியிடம் விசாரணை!

### சட்ட நடவடிக்கை எடுக்க ஆணைக்குழு உத்தரவு



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் சாட்சி விசாரணைகளை தனது கையடக்கத் தொலைபேசியில் மௌலவியொருவர் இரகசியமாக பதிவுசெய்த தகவல் அம்பலமாகியுள்ளது.

பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் நேற்று.... 02

## தடுப்பிலுள்ள மஞ்சளை விடுவிக்க இந்தியத் தூதரகம் கோரிக்கை!

துறைமுகத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள மஞ்சள் தொகையை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம், நிதி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த மஞ்சள் தொகை துறைமுகத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளமையினால், இந்திய ஏற்றுமதியாளர்கள் மாத்திரமன்றி, இலங்கை இறக்குமதியாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் நிதி... 02

| லொத்தர் | வாரம் | திகதி | ஆங்கில எழுத்து | இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| சனிதா வாசனா | 3362ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 05ஆம் திகதி | R | 07 58 60 71 |
| அத கோட்டிபதி | 1032 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 05ஆம் திகதி | Y | 22 28 30 34 |
| சுப்பர் போல் | 1206 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 05ஆம் திகதி | R | 02 33 41 47 |
| அத கோட்டிபதி | 1033 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 06ஆம் திகதி | X | 14 22 39 41 |
| சனிதா வாசனா | 3363 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 06ஆம் திகதி | L | 19 37 60 75 |
| சுப்பர் போல் | 1207 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 06ஆம் திகதி | P | 18 45 58 77 |
| கோட்டிபதி கப்ருக | 621 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 06ஆம் திகதி | Q | 05 15 40 45 |
| சுப்பர் போல் | 1208 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 07ஆம் திகதி | U | 25 43 48 66 |
| அத கோட்டிபதி | 1034 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 07ஆம் திகதி | H | 19 20 22 75 |
| சனிதா வாசனா | 3364 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 07ஆம் திகதி | A | 19 25 38 55 |
| அத கோட்டிபதி | 1035 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 08ஆம் திகதி | Y | 24 28 32 55 |
| கோட்டிபதி கப்ருக | 622 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 08ஆம் திகதி | J | 13 27 69 72 |
| சனிதா வாசனா | 3365 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 08ஆம் திகதி | H | 32 34 37 73 |
| சுப்பர் போல் | 1209 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 08ஆம் திகதி | K | 28 46 56 68 |

## கொரோனா...

மேலும் கூறியதாவது, கொரோனா சூழ்நிலையால் வெளிநாடுகளில் சிக்கித்தவிக்கும் உறவுகள் படும் கவலைகளைக் கண்டு இங்குள்ள அவர்களது உறவுகளும் கண்ணீர் சிந்தும் நிலைமை இருக்கிறது. தூதரகங்கள் வரை சென்றாலும் காவல்காத்து நின்றாலும் அவர்களை நாட்டுக்குள் அழைத்துவர முறையான ஏற்பாடுகள் இல்லை. தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளை காரணம் காட்டி அவர்களை அழைத்துவருவதில் தாமதம் காட்டிவிடமுடியாது. அவர்கள் எமது நாட்டுக்கு வெளிநாட்டு செலாவணியை தேடித் தந்தவர்கள்.

கொரோனா நிலைமையை கட்டுப்படுத்திவிட்டதாக சொல்லும் அரசு இப்படியான நிர்க்கதிக்குள்ளானவர்களை அழைத்துவராமல் அவர்களுக்கு உதவாத பட்சத்தில் அரசு கூறும் கொரோனா ஒழிப்புப் பணிகள் முழுமையாகாதென்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன். - என்றார் மனோ கணேசன் எம்.பி.

நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா கஜேந்திரன், அரவிந்தகுமார் ஆகியோரும் இந்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றி வெளிநாட்டில் சிக்கியுள்ள இலங்கையர்களின் நிலை குறித்து பேசினர்.

## செய்தித்துளிகள்

170 மில்லிகிராம் ஹெரோயினுடன் யுவதியொருவரை கொட்டாவ பொலிஸார் கைதுசெய்துள்ளனர். 31 வயதான அந்த யுவதி, ஆறு ஆண்டுகளாக ஹெரோயின் கடத்தலில் ஈடுபட்டு வந்தாரெனவும், ஹெரோயினுக்கு அடிமையானவர் என்பதுடன், அவர் ஓய்வுபெற்ற பொலிஸ் உயரதிகாரி ஒருவரின் மகள் எனவும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

★★★★★★

கொழும்பு 10, 11, 12, 13, 14 மற்றும் 15 ஆகிய பகுதிகளில் சனிக்கிழமை இரவு 10 மணி முதல் ஞாயிறு காலை 10 மணிவரை 12 மணி நேர நீர்வெட்டு - நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவிப்பு

★★★★★★

மாவத்தகம பிரதேசத்தில் ஆயிரம் போதை குளிகைகளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

★★★★★★

காலியில் வைத்து வெலே சுதாவின் மைத்துனன் உட்பட மூவர் இமதுவ பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

★★★★★★

கடுமையான குற்றச்செயல்களில் ஈடுபட்டு தண்டனை விதிக்கப்பட்டு, பூஸா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 45 கைதிகளில் 39 பேர் உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள கைதிகளில் கஞ்சிபானை இம்ரான், பொடி லெசி மற்றும் வெலே சுதா ஆகியவர்களும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

★★★★★★

பண்டாரகம, அட்டுளுகம பிரதேசத்தில் சுற்றிவளைப்பிற்கு சென்ற பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொண்ட சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட 5 பேர் எதிர்வரும் 25ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன், கைதுசெய்யப்பட்டவர்களில் 15 வயதுடைய சிறுமியை சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு நிலையத்தில் ஒப்படைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

## ரயர்...

ரயர் இறக்குமதியை மட்டுப்படுத்தும் வகையில் அரசாங்கத்தினால் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவினால், இலங்கை ரயர் வர்த்தகம் பாரிய வீழ்ச்சியை சந்தித்துள்ளது. இந்த நிலைமை தொடருமாக இருந்தால் எதிர்வரும் 30 நாட்களில் ரயர் மற்றும் ரியூப்களுக்கான பாரிய தட்டுப்பாடு சந்தையில் நிலவும் என ரயர் இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ரயர் இறக்குமதியை அரசாங்கம் தடை செய்துள்ளமையினால், நுகர்வோர் பாரிய சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக ரயர் இறக்குமதியாளர்கள் சங்கத்தின் உப தலைவர் சுனில் பொன்சேகா தெரிவிக்கின்றார்.

கொவிட்-19 வைரஸ் தாக்கம் காரணமாக நாட்டின் பொருளாதார நிலைமை வீழ்ச்சி கண்டதுடன், நாட்டிற்கு கிடைக்கும் அந்நிய செலாவணி தடைப்பட்டமை ஆகிய காரணங்களை அடிப்படையாகக் கொண்டு கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் ரயர் இறக்குமதியை அரசாங்கம் தடை செய்திருந்தது.

இதன்படி, ரயர் உள்ளிட்ட 156 பொருட்களை, அத்தியாவசியமற்ற பொருட்கள் என்ற அடிப்படையில் அரசாங்கம் இறக்குமதிக்கான தடையை விதித்துள்ளது.

அந்நிய செலாவணித் தொகை நாட்டிலிருந்து வெளியில் செல்வதை தடுக்கும் வகையில் கடந்த ஏப்ரல் மாதம் இந்த தீர்மானத்தை அரசாங்கம் எட்டியது.

எனினும், கடந்த ஜூலை மாதம் இந்த தடையுத்தரவு ஓரளவு தளர்த்தப்பட்ட போதிலும், ரயர் இறக்குமதிக்கான தடை தொடர்ந்தும் அமுலில் இருந்து வருகின்றது.

அரசாங்கத்தினால் நாட்டிற்குள் ரயர் தொடர்பிலான கணிக்கெடுப்பொன்று முன்னெடுக்கப்படாமல், ரயர் இறக்குமதிக்கான தடை விதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. அத்துடன், உள்நாட்டு ரயர் உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து டயர்களை கொள்வனவுசெய்யுமாறு உரிய தரப்பினருக்கு அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இலங்கையிலுள்ள இந்திய நிறுவனமான சியட் நிறுவனத்திடமிருந்து ரயர்களை கொள்வனவு செய்யுமாறு அரசாங்கம் அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சியட் நிறுவன உற்பத்திகளின் ஊடாக நாட்டிற்கு 50 வீதமான ரயர்களே கிடைப்பதுடன், கடந்த காலங்களில் எஞ்சிய 50 வீதமான ரயர்கள் சிங்கப்பூர், தாய்லாந்து, கொரியா, ஜப்பான் மற்றும் டுபாய் ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

குறிப்பாக, கடந்த 15 வருடங்களில் வெவ்வேறு விதமான வாகனங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றமையினால், வெவ்வேறு விதமான ரயர்களின் தேவை நாட்டில் தற்போது காணப்பட்டு வருகின்றது.

தற்போது பஸ், பொருட்களை கொண்டுசெல்லும் லொறிகள், டிரக், உளவு இயந்திரம் உள்ளிட்ட வாகனங்களுக்கான ரயர்களை விநியோகிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஹொரணை பகுதியிலுள்ள அரசாங்கத்துடன் தொடர்புபட்ட சந்தன லொக்குவிதானகேயின் ரயர் தொழிற்சாலையிலிருந்து நாட்டிற்கு தேவையான டயர்களை பெற்றுக்கொள்ள அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

எவ்வாறாயினும், பென்ஸ், ஜகுவர், பி.எம்.டபிள்யூ ஆகிய வாகனங்களுக்கு ரயர் இல்லாமையினால், அந்த வகையிலான வாகனங்களின் பயன்பாடு குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சாதாரண மக்கள் பயன்படுத்தும் எல்டோ ரக வாகனங்களுக்கு கூட ரயர் தட்டுப்பாடு நிலவி வருவதாக அறிய முடிகின்றது. குறிப்பாக, இரண்டு வார காலத்திற்குள் வாகனங்களுக்கு தேவையாக ரயர்களை விநியோகிக்க முடியாத நிலைமை ஏற்படுமாக இருந்தால், ஆயிரக்கணக்கான வாகனங்கள் போக்குவரத்திலிருந்து நிறுத்திவைக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என ரயர் விநியோகஸ்தர்கள் தெரிவிக்கின்றனர்.

வங்கி வட்டி வீதத்திற்கான நிவாரண காலம் நிறைவடைந்துள்ளமையினால், வங்கி அதிகாரிகள் கூட வர்த்தகர்களிடம் கடன் தொகையை அறவிட பாரிய பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

## முன்னாள்...

மாதிவல வீட்டிலிருந்து வெளியேறுமாறு பல்வேறு சந்தர்ப்பங்களில் நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்ட போதிலும், அவர்கள் இதுவரை குறித்த வீடுகளிலிருந்து வெளியேறவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த நிலையில், உடனடியாக குறித்த வீடுகளிலிருந்து வெளியேறுமாறு கடந்த வாரம் நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மாதிவெல வீட்டுத் தொகுதியில் தற்போது தங்கியுள்ளவர்கள், கடந்த ஆட்சிக்காலத்தில் அரசாங்கத்திலும், எதிர்க்கட்சியிலும் இருந்தவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது. புதிதாக தெரிவாகியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பில் தங்க இடமின்றி, ஹோட்டல்களிலும், உறவினர்களின் வீடுகளிலும் தங்கியுள்ளதாக அறிய முடிகின்றது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் புதிதாக 70 இற்கும் அதிகமான புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சேலையில்...

இது தொடர்பில் சிலர் நாராஹேன்பிட்டி பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்க, அவர்கள் தாயாரை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர்.

சேலையில் புத்தரின் உருவம் இருப்பது குறித்து தமக்குத் தெரியாதென்று மேற்படி தாயார் தெரிவித்த போதும் பொலிஸார் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

அவரை பொலிஸ் சரீரப் பிணையில் விடுதலைசெய்து அவர்மீது வழக்கு தாக்கல் செய்ய தீர்மானித்தனர்.

தாயாருக்கு வேறு ஆடைகளை மாற்றுவதற்கான ஏற்பாடுகளை செய்த பொலிஸார், குறிப்பிட்ட சேலையை வழக்கிற்கான பொருளாக பொலிஸ் பாதுகாப்பில் வைத்தனர்.

## சஹ்ரான்...

நடைபெறுவதுடன், இறுதியாக தனது தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் கலந்துகொண்டிருக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் ஏன் அவ்வாறு செய்தார்கள் என ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர், சிசிர மெண்டிஸிடம் வினவினார்.

தான் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் கடமையாற்றிய பின்னர், தேசிய புலனாய்வு பிரதானியாக பதவியேற்றதை தொடர்ந்து, தான் கூறும் விடயங்களை இழுத்தடிப்புச் செய்யும் நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொண்டதாகவும் அவர் பதிலளித்துள்ளார்.

உயர் அதிகாரி என்ற விதத்தில், தாமும் அவர்களிடம் தலை குனிந்து அறிக்கையை கோரச் சொல்லவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சஹ்ரானின் இனவாத நடவடிக்கைகளை தவிர்ப்பதற்கு நிரந்தர தீர்வொன்றை பெற்றுகொள்ள 2019ஆம் ஆண்டு பெப்ரவரி 5ஆம் திகதி நடைபெற்ற புலனாய்வு மாதாந்த கூட்டத்தில் அனைத்து தரப்பினரும் இணக்கப்பாடொன்றை எட்டியிருந்ததாகவும் ஆணைக்குழு முன்னிலையில் சிசிர மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

## தடுப்பிலுள்ள...

அமைச்சுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது. அதனால், சுங்கத் திணைக்களத்தினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள மஞ்சள் தொகையை விடுவித்து, பிரச்சினைக்கு தீர்வொன்றை பெற்றுக்கொடுக்குமாறு இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே கோரிக்கை விடுத்துள்ளார். கோபால் பாக்லேவினால் நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகலவிற்கு இந்த கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சுங்கத் திணைக்களத்தினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள மஞ்சள் தொகையை விடுவிப்பதற்கு எதிர்ப்பு கிடையாது என ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுங்கத்திற்கு அறிவித்துள்ளார். 10 இலட்சம் கிலோகிராம் மஞ்சள் சுங்கத் திணைக்களத்தினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், இறுதியாக அந்த மஞ்சள் தொகையை விடுக்க நடவடிக்கை எடுக்குமாறு புறக்கோட்டை இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த மஞ்சள் தொகை விடுவிக்கப்படும் பட்சத்தில், மஞ்சளுக்கான கட்டுப்பாட்டு விலையாக 750 ரூபாவை நிர்ணயிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மஞ்சள் தொகை விடுவிக்கப்படும் பட்சத்தில், உள்நாட்டு மஞ்சள் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் தாம் 10 கோடி ரூபாவை வழங்க தயாராகவுள்ளதாகவும் இறக்குமதியாளர்கள் அரசாங்கத்திடம் கோரியுள்ளனர்.

நாட்டில் மஞ்சளுக்கான பாரிய தட்டுப்பாடு நிலவி வருகின்ற பின்னணியில், குறித்த மஞ்சள் தொகை விடுவிக்கப்படுமாக இருந்தால் நாட்டிலுள்ள கேள்விக்கு இரண்டு வாரங்களுக்கே அது போதுமானது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது . இந்த மஞ்சள் தொகையை விடுவிக்க உள்நாட்டு விவசாயிகள் எந்தவிதத்திலும் எதிர்ப்பை தெரிவிக்க மாட்டார்கள் என புறக்கோட்டை இறக்குமதியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

## அரச நிறுவனங்கள்...

தீர்மானம் அறிவிக்கப்பட்டுள்ளது.

தனியார் கட்டிடங்களில் நடத்திச் செல்லப்படும் அமைச்சுகள் உள்ளிட்ட அரச நிறுவனங்களை அரசாங்கத்திற்கு சொந்தமான கட்டிடங்களுக்கு மாற்றுகின்றமை குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக அறியமுடிகின்றது.

தனியார் கட்டிடங்களில் அரச நிறுவனங்கள் நடத்திச் செல்லப்படுகின்றமையினால், அரசாங்கத்திற்கு பாரியளவிலான செலவீனம் ஏற்படுகின்றதுடன், அதனை கட்டுப்படுத்தவே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

தனியார் கட்டிடங்களில் நடத்திச் செல்லப்படும் அரச நிறுவனங்களுக்காக மாதாந்தம் 10 கோடி ரூபாவிற்கும் அதிக தொகை செலவிடப்படுவதாகவும், அதனை சேமிப்பதே இந்த திட்டத்தின் நோக்கம் எனவும் அரசாங்கம் குறிப்பிடுகின்றது.

இதன்படி, தனியார் கட்டிடங்களில் நடத்திச் செல்லப்பட்ட பல அரச நிறுவனங்கள் அரசாங்க கட்டிடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன், எஞ்சிய நிறுவனங்கள் குறித்த தகவல்களை பெற்றுக்கொண்டு வருவதாக அரசாங்கத்தின் உள்ளக தகவல்கள் குறிப்பிடுகின்றன.

அதேவேளை, அமைச்சுகள் மற்றும் அரச நிறுவனங்களிலுள்ள வாகனங்களை புதுப்பித்து, அவற்றை பயன்படுத்துமாறு ஜனாதிபதி செயலாளர், அனைத்து அரச நிறுவனங்களுக்கும் அறிவித்துள்ளார்.

மேலும், அமைச்சுகள் மற்றும் இராஜாங்க அமைச்சுகளின் அநாவசிய மேலதிக செலவீனங்களை குறைத்து, அந்த நிதியை பொதுமக்களின் தேவையை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்துமாறும் அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி...

முன்தினம் மதியம் சாட்சியமளித்தபோது, இந்த சம்பவம் இடம்பெற்றது.

அனைத்து இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் பதில் செயலாளரே இரகசியமாக ஒலிப்பதிவில் ஈடுபட்டுள்ளார்.

ஞானசாரரை குறுக்கு விசாரணை செய்ய பல முஸ்லிம் அமைப்புகள் கோரிக்கை விடுத்திருந்ததையடுத்து, நேற்று ஞானசாரர் முன்னிலையாகினார்.

ஞானசார தேரர் சாட்சியங்களை வழங்கத் தொடங்கிய சுமார் இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு, சாட்சியம் வழங்கப்பட்ட அறையில் இருந்த மௌலவி ஒருவரின் நடவடிக்கையில் சந்தேகமடைந்த பொலிஸ் அதிகாரிகள், மௌலவியை வெளியே அழைத்து விசாரணை நடத்தினர்.

இதன்போது, ஞானசாரரின் சாட்சியத்தை தனது கையடக்கத் தொலைபேசியில் மௌலவி பதிவு செய்தமை தெரியவந்தது.

ஆணைக்குழுவிற்குள் நுழையும் வெளியார் யாரும் தனது கையடக்கத் தொலைபேசியை கொண்டுசெல்ல அனுமதிக்கப்படுவதில்லை.

எனினும், குறிப்பிட்ட மௌலவி கையடக்கத் தொலைபேசியை தனது சட்டத்தரணியிடம் வழங்கியதும், ஆணைக்குழுவிற்குள் நுழைந்ததும், மீளவும் இரகசியமாக கையடக்கத் தொலைபேசியை மௌலவி பெற்றுள்ளார்.

இது தொடர்பில் மௌலவிக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ஆணைக்குழு நேற்று பணிப்புரை விடுத்துள்ளது.

## புலம்பெயர்...

சந்தித்த போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கையின் முதலீடுகளை ஊக்குவித்தல் தொடர்பில் கருத்து வெளியிட்ட பிரதமர் கூறியதாவது,

கடந்த ஆட்சிக்காலத்தில் இலங்கையில் பல முதலீடுகளை மேற்கொள்ள வருகை தந்த புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களாகிய நீங்கள் அனுபவித்த சிரமங்களை நாம் நன்கறிவோம், குறிப்பாக, இலங்கையில் முதலீடுகளை செய்வதற்கு உள்ளூர் முகவர்கள் தரகுப் பணம் பெற முற்பட்டதால் உங்களில் பலர் நாட்டில் முதலீடு செய்வதை தவிர்த்து வெளியேறியுள்ளமை எமக்கு மிகவும் வேதனை அளிக்கிறது.

எமது அரசு உங்களுக்கான முழுமையான பாதுகாப்பை உறுதிப்படுத்தும்; அத்துடன் உங்களிடம் யாராவது தரகுப் பணம் அல்லது வேறு ஏதாவது தொல்லைகள் கொடுத்தால் நீங்கள் ஜனாதிபதி மற்றும் பிரதமர் அலுவலகத்திற்கு நேரடியாக தெரியப்படுத்தலாம்.

குளிர் - பனி என்று பாராமல் உங்களை வருத்தி நீங்கள் உழைக்கும் பணத்தை உங்கள் மண்ணில் நீங்கள் தைரியத்துடன் முதலீடு செய்வதற்கு எமது அரசு என்றும் உங்களுக்கு பக்கபலமாக செயற்படும்.

எம் அனைவரதும் அழகிய இலங்கைத் தீவை உங்கள் வரவால் வெகு விரைவில் இன்னும் பன்மடங்கு அழகிய மற்றும் வளம் கொழிக்கும் உலகம் திரும்பிப் பார்க்கும் நாடாக்குவதற்கு நாம் அனைவரும் கைகோர்த்து பயணிப்போம் - என மேலும் புலம்பெயர்ந்துள்ள முதலீட்டாளர்களிடம் நம்பிக்கை வெளியிட்டார் பிரதமர்.

## மிலேனியம்....

கூறிய இன்றைய ஆட்சியாளர்கள் இப்போது மௌனம் காப்பதேன்? அந்த ஒப்பந்தம் மோசமானது என்றால் அதனை கிழித்தெறியவேண்டியது தானே? பதிலளிக்க முடியாமல் சமாளிக்கக் கூடாது.

இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது குறிப்பிட்டார் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ.

## கோபியோ...

அதிகளவு பிரதிநிதித்துவத்தைக்கொண்ட அரசியல் கட்சியான தமிழ் முற்போக்குக் கூட்டணியின் அரசியல் பிரமுகர்கள் ஓரங்கட்டப்பட்டிருந்ததாக நிகழ்வில் கலந்துகொண்ட ஒருவர் 'தமிழன்' செய்திகளிடம் தொலைபேசியூடாக விசனம் தெரிவித்தார். இந்திய வம்சாவளி மக்களின் உலகளாவிய அமைப்பு என்ற பெயரை வைத்துக்கொண்டு அம்மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் அணிக்கு அழைப்பு விடுத்துவிட்டு பின்னர் உரிய மரியாதையை வழங்காமல் நடந்துகொண்டது நாகரீகமானதா? என்றும் கேள்வியெழுப்பினார் அந்தப் பிரமுகர்.

## அந்த மூன்றாவது சக்தி...

கொண்டு எழுதப்பட்டதாகும்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஹக்கீம் சந்தேகிக்கும் சக்தி 'றோ' என்று அவரே சொன்னதாக நாங்கள் குறிப்பிடவில்லை. அதேபோல் குறித்த செய்தியின் இறுதியில், "மேற்படி விசாரணை ஆணைக்குழு ஹக்கீமை தனியே விசாரணைக்குட்படுத்தும் பட்சத்தில் இது தொடர்பில் மேலதிக தகவல்கள் கிடைக்கும் என்ற கரிசனையை அரச புலனாய்வுத்துறை கொண்டிருப்பதாகவே நாங்கள் குறிப்பிட்டோம். பொறுப்பான ஊடகம் என்ற வகையில் வெளியில் வராத பல முக்கிய தகவல்களை நம்பகத்தன்மையுடன் வெளியிடவேண்டிய கடப்பாடு எங்களுக்குள்ளது.

ஹக்கீம் எம்.பி. எமக்கு அனுப்பிய குறிப்பில், ஆணைக்குழுவின் முன் இரண்டாவது முறையாகவும் கடந்த 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு ஊடகங்களின் பங்குபற்றுதலின்றி சாட்சியமளிக்கும்போதுகூட எந்தவொரு நாட்டையோ, அமைப்பையோ குறிப்பிட்டு எதனையும் கூறவில்லை என்று கூறியிருக்கிறார். தேசிய தவ்ஹீத் ஜமாத் அமைப்பின் தலைவர் சஹ்ரான் ஹாஷிமுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புடன் தொடர்பில்லாமல் வெளிச்சக்தி ஒன்று அவரை இயக்கியிருக்க வேண்டுமென சந்தேகித்த ஹக்கீம் எம்.பி., அந்த சக்தி யாரென்பதை ஊடகங்கள் இல்லாத ஆணைக்குழு முன்னிலையில் கூறாமல் விட்டதன் மர்மம் என்ன? தெளிவுபடுத்தல் தேவை. (ஊடகங்கள் இல்லாமல் அந்த விடயங்களை கூறுவதாக எம்.பி. முன்னர் கூறியிருந்ததை இங்கு நினைவு படுத்த விரும்புகிறோம்). உண்மையில் அந்த மூன்றாம் சக்தி யார் என்பதை ஹக்கீம் எம்.பி. விளக்கும் பட்சத்தில், மேற்படி தாக்குதல் சம்பவங்களின் பின்னர் இலங்கை முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள கட்டுக்கதைகளுக்கும் அது முடிவு கட்டும் என்று உறுதியாக நம்புகிறோம்.

**- ஆசிரியர் -**

## எந்த நாட்டையும்...

தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் விசனம் தெரிவித்துள்ளார்.

காலையில் இச்செய்தி வெளியான பின்னர் ஆசிரியரான தங்களுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு அதனை அவர் சுட்டிக்காட்டியதாகவும், அதன் பின்னணியில் பிரஸ்தாப பத்திரிகையில் அதேயளவு முக்கியத்துவமளித்து அவரது இந்த மறுப்புச் செய்தியை பிரசுரிக்குமாறும் வேண்டிக்கொள்கின்றார்.

மேற்படி செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, எந்தவொரு நாட்டினதும் உளவுத்துறையை சுட்டிக்காட்டி தாம் எந்தவிதமான கருத்தையும் ஆணைக்குழுவின் முன்னிலையில் தெரிவிக்கவில்லை எனவும், தங்கள் பத்திரிகையில் ஒரு நாட்டின் உளவுத்துறையை சம்பந்தப்படுத்தி வெளியிடப்பட்டுள்ள செய்தி வாசகர்கள் மத்தியில் தவறான மனப்பதிவை ஏற்படுத்தும் விதத்தில் அமைந்திருப்பதோடு, அது அயல்நாடுகளுடன் பேணிவரும் நற்புறவுக்கு உகந்தது அல்ல என்றும், அத்துடன் ஏனைய ஊடகங்களும் அதனை மேற்கோள் காட்டி திரிபுபடுத்திய செய்திகளை வெளியிடும் நிலைமை ஏற்படலாம் என்றும் அவர் தமது கட்சியின் ஊடகப் பிரிவினூடாக தங்களுக்கு அறிவிக்குமாறு பணித்துள்ளார்.

குறித்த செய்தியின் இறுதியில் "மேற்படி விசாரணை ஆணைக்குழு ஹக்கீமை தனியே விசாரணைக்குட்படுத்தும் பட்சத்தில் இது தொடர்பில் மேலதிக தகவல்கள் கிடைக்கும்" என்றவாறு பிரசுரிக்கப்பட்டுள்ளதும் பிழையானது என அவர் மேலும் அறிவித்துக்கொள்கின்றார்.

இந்த ஆணைக்குழுவின் முன் இரண்டாவது முறையாகவும் கடந்த 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு சாட்சியமளிக்கும் போதே, அதன் இறுதிக் கட்டத்தில் தமது வேண்டுகோளின் பெயரில் ஊடகங்களின் பங்குபற்றுதலின்றி சில தகவல்கள் தம்மிடமிருந்து பதிவு செய்யப்பட்டதாகவும் அவர் தெரியப்படுத்துகின்றார்.

ஆனால், அப்பொழுதும் கூட, எந்தவொரு நாட்டையோ, அமைப்பையோ குறிப்பிட்டு தாம் எதனையும் கூறவில்லை என்றும் அவர் திட்டவட்டமாக தெரிவித்துக்கொள்கின்றார்.

# பாடசாலை சமூகத்தினரின் கோரிக்கைக்கிணங்க கிளிநொச்சியில் சில பாடசாலைகள் தரமுயர்ந்தன



## அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

கடற்றொழில் அமைச்சரும் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவருமான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகள் தரமுயர்த்தப்பட்டுள்ளன.

பாடசாலை சமூகத்தினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையைத் தொடர்ந்து அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் பயனாக கிளி. இராமநாதபுரம் மகா வித்தியாலயம் மற்றும் கிளி. இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலை ஆகியவை தரமுயர்த்தப்பட்டுள்ளன.

1956 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கிளிநொச்சி இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தில் 1995ஆம் ஆண்டிலிருந்து உயர்தர கலை, வர்த்தகப் பிரிவுகளுக்கான வகுப்புகள் இடம்பெற்றுவருகின்றன.

தற்போது சுமார் 850 மாணவர்கள் கல்வி கற்று வருகின்ற நிலையில், பாடசாலையில் உயர் தரத்திற்கான கணித, விஞ்ஞானப் பிரிவுகளை ஆரம்பிக்க ஒத்துழைக்குமாறு பாடசாலை சமூகத்தினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமைவாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதேபோன்று, கிளிநொச்சி இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலை சமூகத்தினர் முன்வைத்த கோரிக்கைக்கமைய குறித்த பாடசாலையில் உயர்தர கலைப் பிரிவுகள் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டு, 1 சி பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டுள்ளது. தங்களுடைய நீண்ட நாள் கோரிக்கைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நடவடிக்கை காரணமாக நிறைவேறியிருப்பதையிட்டு மகிழ்ச்சி வெளியிட்டுள்ள சம்பந்தப்பட்ட பாடசாலை சமூகத்தினர், அமைச்சருக்கு தமது நன்றியை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உணவகமொன்றின் சிற்றுண்டிக்குள் பாவனைக்கு ஒவ்வாத விநோத முட்டை

(வவுனியா)

வவுனியாவில் உணவகமொன்றின் சிற்றுண்டிக்குள் (முட்டை ரோல்) பாவனைக்கு ஒவ்வாத விநோத முட்டை நுகர்வோரால் இனங்காணப்பட்டு வவுனியா நகரசபையின் பொதுச் சுகாதார பரிசோதகரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

வவுனியா பஜார் வீதியில் அமைந்துள்ள வெதுப்பகத்துடன் கூடிய சிற்றுண்டிச்சாலையொன்றில் நேற்று முன்தினம் மாலை தேநீர் அருந்தச்சென்ற வாடிக்கையாளர்களுக்கு சுடச்சுட பரிமாறப்பட்ட சிற்றுண்டிக்குள் இருந்த முட்டை விநோதமாக இருந்துள்ளது. குறித்த முட்டை இறப்பரினாலான முட்டை போன்ற தோற்றத்தில் இருந்ததுடன், அதன் இயல்பும் முற்றிலும் மாறுபட்டதாக



இருந்தமையை உணர்ந்த வாடிக்கையாளர்கள் வவுனியா நகரசபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து குறித்த சிற்றுண்டிச்சாலைக்கு விரைந்த பரிசோதகர் நீண்ட ஆய்வின் பின்னர் குறித்த சிற்றுண்டிகளை கையகப்படுத்தி மேலதிக நடவடிக்கைகளுக்காக எடுத்துச் சென்றுள்ளனர்.

குறித்த வாடிக்கையாளர்கள் தாம் உட்கொண்ட சிற்றுண்டியின் உள்ளிருக்கும் முட்டையின் குறைபாட்டை உணவகத்தின் உரிமையாளருக்குத் தெரியப்படுத்தியபோதும் அதை பொருட்படுத்தாத உரிமையாளர், அவர்களால் வீசப்பட்ட சிற்றுண்டி மற்றும் அவருக்கு பிரித்து காண்பிக்கப்பட்ட சிற்றுண்டிக்கும் பணத்தை அறவிட்டுவிட்டு ஏனைய வாடிக்கையாளர்களுக்கும் பரிமாற முற்பட்டமையைத் தொடர்ந்தே இது தொடர்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு முறையிடப்பட்டது.

# திலீபன் நினைவுதினம் அனுஷ்டிக்க பொலிஸ் அனுமதி மறுப்பு

(வவுனியா)



5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நீராகாரமின்றி மரணித்த விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதிகளில் ஒருவரான தியாகி திலீபனின் நினைவு தினத்தை அனுஷ்டிப்பதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதி வவுனியா பொங்குதமிழ் தூபிக்கு முன்பாக இருந்து நல்லூர் வரையில் பேரணியொன்றை நடத்துவதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தது. வவுனியா நகரசபை உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முக்கியஸ்தரும் குறித்த நிகழ்வின் ஏற்பாட்டாளருமான ஜானுஜன் பொலிஸில் அனுமதி பெற முற்பட்ட நிலையில், அதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயத்தை உறுதிப்படுத்திய நகரசபை உறுப்பினர் ஜானுஜன், இவ்விடயம் தொடர்பில் வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றை செய்யவுள்ளதாகவும் தெரிவித்தார்.

# யாழில் முப்படை - பொலிஸாரின் ஆக்கிரமிப்பில் 3,027 ஏக்கர் காணிகள்



சுமார் 3027.85 ஏக்கர் தனியார் காணிகள் இலங்கை பாதுகாப்புத் தரப்பினரிடம் காணப்படுவதாக யாழ். மாவட்ட செயலக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ். மாவட்டத்தில் 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 23,850.72 ஏக்கர் தனியார் காணிகள் பாதுகாப்புத் தரப்பினரால் கையகப்படுத்தப்பட்டு இருந்த நிலையில், 2014ஆம் ஆண்டு 16,775.50 ஏக்கராகவும் 2015ஆம் ஆண்டு 7075.22 ஏக்கராகவும் 2019ஆம் ஆண்டு 4,047.37 ஏக்கராகவும் குறைவடைந்துள்ளன. தற்போது அது 3,027.85 ஏக்கராக காணப்படுகின்றது.

இதன்படி தனியார் காணிகளில் நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் 21.91 ஏக்கரும், வேலணையில் 54.59 ஏக்கரும், ஊர்காவற்றுறையில் 2.37 ஏக்கரும், காரைநகரில் 32.50 ஏக்கரும், யாழ்ப்பாணத்தில் ஒரு ஏக்கரும், நல்லூரில் 4.85 ஏக்கரும், சண்டிலிப்பாயில் 26.53 ஏக்கரும், சங்கானையில் 23.68 ஏக்கரும், உடுவிலில் 0.71 ஏக்கரும், தெல்லிப்பழையில் 2480.15 ஏக்கரும், கோப்பாயில் 9.61 ஏக்கரும், சாவகச்சேரியில் 70.88 ஏக்கரும், கரவெட்டியில் 4.49 ஏக்கரும், பருத்தித்துறையில் 9.39 ஏக்கரும், மருதங்கேணியில் 285.20 ஏக்கரும் பாதுகாப்புப் பிரிவின் கீழ் உள்ளன. இவற்றில் இலங்கை இராணுவத்திடம் 2054 .25 ஏக்கரும், கடற்படையிடம் 274.57 ஏக்கரும், விமானப்படையிடம் 646.50 ஏக்கரும், பொலிஸாரிடம் 52.53 ஏக்கரும் உள்ளதாக அறியமுடிகின்றது.




# புளொட் இராணுவத்தளபதி மாணிக்கதாசனின் நினைவுதினத்தை முன்னிட்டு தாகசாந்தி நிலையம்

(வவுனியா)

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) இராணுவத் தளபதியும், உபதலைவருமான நாகலிங்கம் மாணிக்கம்ராஜன் (மாணிக்கதாசன்) மற்றும் அவருடன் இணைந்து 'விடுதலைக்கு விதையான' தர்மலிங்கம் தேவராஜா (இளங்கோ), முருகேசு குணரட்ணம் (வினோ) ஆகியோரின் இருபத்தோராவது நினைவுதினம் புளொட் மற்றும் அதன் அரசியல் பிரிவான டி.பி.எல்.எவ். தோழர்கள் ஆதரவாளர்களால் உலகெங்கும் நினைவுகூரப்படுகிறது.

மாணிக்கதாசனின் நினைவாக நேற்று முன்தினம் அவரது குடும்ப உறவுகள், தோழர்கள், ஆதரவாளர்களால் 'தாகசாந்தி நிலையம்' வவுனியா, கோவில்குளம் வீதியிலுள்ள 'புளொட்' செயலதிபர் மற்றும் இராணுவத் தளபதி மாணிக்கதாசன் ஆகியோரின் சமாதிக்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி தாகசாந்தி நிலையம் ஊடாக அவ்வீதியால் சென்றுவரும் அனைவரும், தாகம் தீர்த்து செல்வதைக் காணக்கூடியதாக உள்ளதுடன், மறைந்த தோழர்களை நினைவு கூர்ந்து, இன்றைய வெப்ப காலநிலையைக் கருத்திற்கொண்டு,




இதுபோன்ற செயற்பாடுகள் வரவேற்கக்கூடியதென பாராட்டி செல்வதையும் காணக்கூடியதாக உள்ளது.

# கார் - மோட்டார் சைக்கிள் மோதி விபத்து; மூவர் படுகாயம்!






(வவுனியா)

வவுனியா, நெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாம்பல் தோட்டம் பகுதியில் காருடன் மோட்டார் சைக்கிள் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் மூவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா - மன்னார் பிரதான வீதியில் சாம்பல் தோட்டம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8.40 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், வவுனியா - மன்னார் பிரதான வீதியில் நெளுக்குளம் பகுதியிலிருந்து பூவரசங்குளம் பகுதியை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் கற்பகபுரம் பகுதியிலிருந்து வவுனியா நோக்கி பயணித்துக்கொண்டிருந்த காருடன் நேருக்கு நேர் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த மூன்று இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில், பொதுமக்களின் உதவியுடன் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

காரின் முன் பகுதியில் முழுமையாக சேதமடைந்துள்ளதுடன், மோட்டார் சைக்கிள் பகுதியளவில் சேதமடைந்துள்ளது. சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர்.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த செக்கட்டிப்புலவு பகுதியைச் சேர்ந்த 26, 28, 30 வயது மதிக்கத்தக்க மூன்று இளைஞர்களே படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது

# மன்னார் நகரசபையில் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதில்லை

## மன்னார் நகரசபை உறுப்பினர்கள் குற்றச்சாட்டு

கடந்த மூன்று வருடங்களாக மன்னார் நகரசபை அமர்வுகளில் நிறைவேற்றப்படுகின்ற தீர்மானங்களைவிட நிறைவேற்றப்படாத தீர்மானங்களே அதிகமாக நடைமுறைப்படுத்துவதாகவும் சபையில் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை எனவும் மன்னார் நகரசபை உறுப்பினர்கள் குற்றச்சாட்டு முன்வைத்துள்ளனர்.


மன்னார் நகரசபை அமர்வுகளில் உறுப்பினர்களால் கொண்டுவரப்படுகின்ற கோரிக்கைகள், பிரேரணைகள் சபை அமர்வுகளில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டாலும் அவை நடைமுறைப்படுத்தப்படுவதில்லை எனவும் அவற்றை செயற்படுத்துவதற்குப் பதிலாக எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு நேரெதிரான விடயங்களே நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் மன்னார் நகரசபை உறுப்பினர் மைக்கல் கொலின் குற்றஞ்சுமத்தியுள்ளார். கடந்த சபை அமர்வில் மன்னார் நகர்ப் பகுதிகளுக்குள் உள்ள சட்டவிரோத கடைகளை அகற்றுமாறு ஏகமனதாக தீர்மானம் மேற்கோள்ளப்பட்டிருந்த நிலையில், இன்றுவரை சட்டவிரோத கடைகள் அகற்றப்படாமல் இருப்பதாகவும் புதிது புதிதாக நகரசபை அங்கத்தவர்களின் அனுமதியோ சபை அனுமதியோ இன்றி கடைகள் அமைக்கப்பட்டு வருவதாகவும் நகரசபை உறுப்பினர்கள் குற்றஞ்சுமத்துகின்றனர்.

மன்னார் நகரசபை பூங்காவின் பெயர்ப்பலகையை கூட மறைக்கும் முகமாக கடையொன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் கடை அமைப்பதற்கான அனுமதி நகரசபையால் வழங்கப்பட்டுள்ளதாகவும் மக்களால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைவாக குறித்த பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட மன்னார் நகரசபை உறுப்பினர்களான மைக்கல் கொலின், ரெட்ணசிங்கம் குமரேஸ், ஜோசப் தர்மன் ஆகியோர் குறித்த இடத்தைப்பார்வையிட்ட பின்னர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அதேநேரத்தில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த அன்றாட ஜீவனோபாயத்துக்கென சிறு சிறு வியாபாரங்களை மேற்கொள்ளும் பாமர மக்களின் கடைகளை அகற்றும் செயற்பாட்டில் ஈடுபடும் நகரசபை மன்னார் மாவட்டத்தைச் சாராத பெரும் பணக்காரர்களுக்கு நகரசபை ஊடாக தன்னிச்சையாக கடைகளை வழங்குவதாகவும் இவ்வாறான தன்னிச்சையான செயற்பாடுகள் தொடரும் பட்சத்தில் மன்னார் நகரசபையின் அடுத்த அமர்வில் இது தொடர்பாக தெரிவித்து வெளியேறப் போவதாகவும் தெரிவித்துள்ளனர்.

அதேநேரத்தில் மன்னார் நகர எல்லை பகுதிக்குள் நகரசபை அனுமதி இன்றி அதிகளவான கடைகள் வேறு பகுதிகளை சேர்ந்தவர்களுக்கும் தனி நபர்களுக்கு இரண்டு கடைகளும் இரண்டுக்கு மேற்பட்ட கடைகளும் வழங்கப்பட்டுவருதாகவும் தெரிவிக்கப்படுள்ளது.

# காதல் ஜோடி சடலமாக மீட்பு



கிளிநொச்சி – பரந்தன், ஓசியர் சந்திப் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் காதல் ஜோடியொன்றின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

இருவரும் ஒன்றாக தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டிருந்தனர்.

கடந்த 4ஆம் திகதி முதல் காணாமல்போன நிலையில் தேடப்பட்டுவந்த பரந்தனைச் சேர்ந்த இளைஞர் இலங்கை மின்சார சபையில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் சுசிதரன் (வயது - 28), இரத்தினபுரத்தைச் சேர்ந்த அண்மையில் பட்டதாரி நியமனத்தின்படி கிளிநொச்சி பிரதேச செயலகத்தில் பணியாற்றும் தனுஷியா (வயது - 27) ஆகியோரின் சடலங்களே மீட்கப்பட்டுள்ளன.

இருவரும் பல வருடங்களாக காதலித்து வந்த நிலையில், குடும்பங்களின் எதிர்ப்பு காரணமாகவே தற்கொலை செய்துகொண்டிருக்கலாமென உறவினர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுவருகிறது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900 / 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilannews@yahoo.com
2020, செப்டெம்பர் 11ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# கடன் வழங்க முன்னர் கவனிக்கவேண்டியவை!

பல்வேறு பொருளாதார நெருக்கடிகளை சந்தித்துள்ள மக்களை அந்தப் பிரச்சினைகளிலிருந்து மீட்டெடுப்பதற்காக கடன் வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும்போது, எளிமையான நிபந்தனைகளை பின்பற்றுமாறு நிதி அமைச்சரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அரச வங்கிகளின் பிரதானிகளுக்கு ஆலோசனை வழங்கியிருக்கிறார்.

நேற்று முன்தினம் நிதி அமைச்சில் இடம்பெற்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தின்போதே பிரதமர் மேற்கண்டவாறு ஆலோசனையை வழங்கியதுடன், கடன்களை மீள்செலுத்துவதில் காணப்படும் சிக்கல் நிலை மற்றும் புதிதாக கடனைப் பெற்றுக்கொள்வதற்காக வருகைதரும் மக்களை சிரமத்துக்குள்ளாக்க வேண்டாம் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இலங்கை கடன் தொடர்பான பணியகத்தின் தரவுகளை ஆய்வுசெய்யும் நடவடிக்கைகளில் மக்களுக்கு ஏற்படும் சிரமங்கள் தொடர்பில் இங்கு பேசப்பட்டிருக்கிறது. நபரொருவர் கடன் பெறுவதற்கு தகுதியற்றவர் என்பதை அவர் அறிந்துகொள்வதில் உள்ள சிரமங்கள் குறித்து இங்கு ஆராயப்பட்டதுடன், அவற்றுக்கான தீர்வுகள் குறித்தும் பேசப்பட்டன.

ஒருவர் வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்களிலிருந்து கடன் பெற்று உரிய காலத்திலிருந்து திருப்பிச் செலுத்தமுடியாமல் போகும்பட்சத்தில் பலவித துன்பங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளதை நாம் கூறித்தான் தெரியவேண்டுமென்பதில்லை. அவருக்கு மட்டுமல்லாமல், அந்தக் கடனுக்கு பிணை நின்றவர்களும் பாதிப்படையவேண்டிய நிலையில் உள்ளது. கடன் மீள்செலுத்துதல் சிக்கலானால் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்தும் வரை கடன் வாங்கியவர் மற்றும் பிணையாளர்களும் பாதிப்படைகின்றனர். அவர்களின் பெயர்கள் ‘கிரிப்’ எனப்படும் கடன் பணியக பட்டியலுக்குச் செல்கிறது. அந்தக் கடன் மீள் செலுத்தப்படும்வரை அவர்களுக்கு வேறு கடன்களையோ அல்லது வங்கிகளிடமிருந்து வேறெந்த வசதிகளையோ பெறமுடியாது. இது ஒருபுறமிருக்க, இப்படியான கடன் பெற்றவர்கள் கடன்களை எப்பாடுபட்டாவது திருப்பிச் செலுத்தினாலும் அவரது அல்லது கடனுக்குப் பிணை நின்றவர்கள் பெயர் கிரிப் பட்டியலிலிருந்து உடனடியாக நீங்குவதில்லை. அதற்கு சிலகாலம் எடுக்கிறது. கடன் வாங்கி இப்படி கிரிப் பட்டியலுக்கு செல்வோர் அந்தப் பட்டியலிலிருந்து நீங்க நீண்டகாலம் எடுப்பது, நவீன தொழில்நுட்ப வசதிகள், விரைவுத் தொடர்பாடல் வசதிகள் இருக்கும்போது நேரத்தை வீணடிக்கும் செயலாகவே காணப்படுகிறது.

இந்த நிலைமை மாற்றப்படவேண்டும். தற்போதைய கொரோனா வைரஸ் தாக்க சூழ்நிலையில் கடன்களை மீள்செலுத்துவதில் சிக்கல்களை எதிர்கொள்வோர், குறிப்பாக, வர்த்தகர்கள், கல்விக்காக கடன் பெற்ற மாணவர்கள், விவசாயம் செய்ய கடன் பெற்ற விவசாயிகள், சிறுகைத்தொழிலாளர்கள், குடிசைக் கைத்தொழிலாளர்கள் என பலர் குறித்து அரசு கவனத்திற்கொள்ள வேண்டும். ஓரிரு மாதங்கள் அவர்களில் தாமதம் ஏற்பட்டாலும் அவர்களை உடனடியாக கடன் பட்டியலில் சேர்ப்பது முறையல்ல. மறுபுறம் கடன்பட்டியல் விபரங்கள் உடனுக்குடன் அறியப்படும் வகையில் இலகுபடுத்தப்பட வேண்டும்.

வாடிக்கையாளர்களுக்கு கடன்களை வழங்கும்போது கடைப்பிடிக்கும் மென்போக்கை கடன்களை திருப்பி ஏற்கும்போது வங்கிகளோ அல்லது நிதி நிறுவனங்களோ பின்பற்றுவதில்லை. இதன் காரணமாகவே வங்கிகள் மீது அதிருப்தியடைந்து, உத்தரவாதங்களற்ற வெளி நிதி நிறுவனங்களை மக்கள் நாடுகின்றனர். வாடிக்கையாளர்கள் மீதான அபிப்பிராயம், கடன்களை வாங்கி செலுத்தமுடியாத நிலையில் அவர்கள் இருந்தால் கரிசனையுடன் அவர்களை அரவணைக்க நிதித்துறையினர் குறிப்பாக, வங்கித்துறையினர் அதிலும் குறிப்பாக, அரச வங்கித்துறையினர் பழகவேண்டும். கடன் வாங்கி செலுத்தத் தவறும் அல்லது வரி ஏய்ப்புச் செய்யும் பெருமுதலைகளை விட்டுவிட்டு நடுத்தர வர்க்கத்தினர் மீது பாயும் சட்டங்களும் திருத்தப்படவேண்டும்.

கடன் வழங்கலில் எளிமையான நடைமுறைகளை பின்பற்றவேண்டுமென பிரதமர் கூறிய ஆலோசனை நல்லதுதான். ஆனால், அதற்குமுன் மேற்கண்ட விடயங்கள் முக்கியமாக கவனத்திற்கொள்ளப்பட வேண்டும்.

“தமிழன்” பத்திரிகை தொடர்பான உங்கள் கருத்துக்களை news@liberty.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.



# இன்பம் தரும் இனிய கிராமங்கள்

- மு. மகேந்திர பாபு -
இளமனூர்

சிறகு விரிக்கும் சின்னஞ்சிறு சிட்டுக்குருவிகள், தாய்மடியில் முட்டி முட்டி வயிறுமுட்டக் குடித்துவிட்டுத் துள்ளி ஓடும் தன் கன்றை அம்மா என்றழைக்கும் தாய்ப்பசு, ஓய்வறியாமல் எந்நேரமும் தண்ணீரைத் தந்துகொண்டிருக்கும் ஊர்ப்பொது அடிகுழாய், கோயில் மரத்தடியின் கீழே ‘ஆடுபுலி ஆட்டத்தில்’ அமைதியாகவும், ஆரவாரமாகவும் காய்களை நகர்த்திக்கொண்டிருக்கும் பெரியவர்கள், பம்பரமோ, கிட்டிக்குச்சியோ, கோலிக்குண்டோ, பச்சக் குதிரையோ, கபடியோ என ஏதோ ஒரு விளையாட்டில் தன்னை முழுமூச்சுடன் ஈடுபடுத்தி விளையாடும் சிறுவர்கள். பல்லாங்குழி, பாண்டியாட்டம், தாயம், கும்மி, தட்டாங்கல் என சிறுவர்களுக்கு நிகராகச் சிறுமிகளின் விளையாட்டுகள், சின்னஞ்சிறு குஞ்சுகளுடன் இரை தேட வரும் தாய்க்கோழிக்குப் பாதுகாப்பாகப் பருந்தை விரட்ட வரும் சேவலின் கொக்கரிப்புச் சத்தம், தன் குரைப்புச் சத்தத்தினால் இவர் ஊருக்குப் புதியவர் என வேற்று நபரை அடையாளம் காட்டும் நாய்களும், குயில்களும், மயில்களும், கிளிகளும், மைனாக்களும், கரிச்சான்களும், செம்போத்துகளும் முற்றத்து மரத்தில் அமர்ந்து தத்தம் குரலால் நம்மை நலம் விசாரிப்பதைப் போன்ற உணர்வு. காதுகுத்தோ, கல்யாணமோ, பிறப்போ, இறப்போ ஒட்டுமொத்த மக்களும் ஒன்றுகூடும் காட்சி. ஆம் நண்பர்களே! இதுதான் கிராமத்தின் மாட்சி.

## வயலும் வாழ்வும்

கிராமத்தில் வயலும், வாழ்வும் இரண்டறக் கலந்தது. உலகு உய்ய, உழவனின் உழைப்புகளைப்பின்றித் தொடர்ந்துகொண்டிருக்கிறது. வயல்தான் உழவர்களுக்கான உலகம். வயல்தான் உழவர்களுக்கு கோவிலாகவும், விளையும் பயிர்களே, உயிர்களைக் காக்கும் சுவாமியாகவும் உள்ளன. ஐந்திணை வகுத்த பண்டைத் தமிழர்கள் வயலும் வயல் சார்ந்த பகுதியையும் ‘மருதம்’ என அழைத்தனர். மக்களும் மகிழ்ச்சியோடு உழைத்தனர். வானம் கருக்கத் தொடங்கும்போது கிராமத்து மக்களின் வாழ்க்கை வெளுக்கத் தொடங்குகிறது. ஆடிப்பட்டம் தேடி விதைத்து, ஓடியாடி தன் உழவுப் பணியை மகிழ்வோடு தொடங்குகிறார்கள்.

## விவசாயியின் உழைப்பு

ஏர் பிடித்து உழுது நிலத்தைப் பண்படுத்துவதில் தொடங்குகிறது மக்களின் பசியாற்றுவது. காலைக் கதிரவனுக்கு முன் எழுந்து வயலுக்குச் சென்று, மாலையில் மறையும் வரை நின்று, மணிக்கணக்கில் மகிழ்ச்சியோடு வேலை செய்பவர்கள் விவசாயிகள். விதைப்பில் தொடங்கி அறுவடை வரை அயராது உழைத்து, களத்தில் மகசூல் நிறையும்போது மக்கள் மனதில் மகிழ்ச்சி நிறையும். நலமும், வளமும் நிறையும். உழைக்கும் நாட்களே உன்னதமான நாட்கள் என்று உலகுக்கு உணர்த்துபவர்கள் வேளாண் மக்கள். பொருட்செல்வம் அதிகம் இல்லையென்றாலும், குறைவற்ற செல்வமாக நோய்நொடியின்றி அவர்களது வாழ்க்கை முறை அமைந்திருக்கிறது. அவர்கள் உண்ணும் உணவே மருந்தாக அமைகிறது. ஒவ்வொரு வீடும் உடற்பயிற்சிக்கூடம். அது கற்றுத் தருகிறது ஆரோக்கிய பாடம்.

## உணவில் ஆரோக்கியம்

அம்மியில் அரைத்துத்தான் மணக்க மணக்கச் சமைக்கிறார்கள். ஆட்டு உரலில் மாவு ஆட்டுகிறார்கள். திருகில் அரைத்துத் தானியங்களை உடைக்கிறார்கள். நடந்து சென்றுதான் ஊர்ப் பொதுக்குழாயில் தலையிலும், இடுப்பிலும் தண்ணீர்க்குடம் தூக்கி வருகிறார்கள். வேலைக்கு ஆட்கள் வைக்காமல் இருபாலாரும் தத்தம் வேலைகளைச் செய்கிறார்கள். வயல் வேலைக்குச் சென்று திரும்புகையில் விலையின்றி கீரைகளையும், அதலக்காய்களையும் பறித்து வருகிறார்கள். நீச்சுத் தண்ணியும், பழைய சோறும் அவர்களுக்கு ஆரோக்கியத்தைத் தருகின்றன. எழுபது, எண்பது வயது கடந்தாலும், அவர்கள் வாழ்க்கைப் பயணம் நோயின்றி நடந்துகொண்டிருக்கிறது. காரணம், அவர்களது உணவு முறை. கும்பாவில் கரைக்கப்பட்ட கம்மங்கஞ்சியோ, கேப்பக்கூழோ, சாமைச்சோறோ அவர்களுக்கு நோயற்ற வாழ்வைத் தருகின்றன. தாங்கள் உண்ணும் உணவில் என்னென்ன சத்துகள் இருக்கின்றன என அவர்களுக்குத் தெரியாது. அலையடிக்கும் சிறுகடலென விரிந்திருக்கும் கண்மாயில் நீச்சலுடன் குளியல். நினைக்க நினைக்க நெஞ்சம் நிறையும் நினைவுகளுடன் நோயற்ற வாழ்க்கையை அனுபவிக்கிறார்கள் கிராமத்து மக்கள்.

## உறவும் உபசரிப்பும்

கிராமத்திற்குப் புதிதாக ஒரு நபர் வந்து இன்னாரைப் பார்க்கவேண்டும் எனச் சொன்னால், அவருக்கு தாகம் தீர்க்க முதலில் தண்ணீர் கொடுத்து, திண்ணையில் அமரவைத்து நலம் விசாரிப்பார்கள். யாரைத்தேடி வந்தாரோ அவரது வீட்டிற்கே அழைத்துச் சென்றும் விடுவார்கள். கூட்டுக்குடும்ப உறவுகள் மறைந்துவரும் இன்றைய காலச்சூழலில் கிராமங்களில் கூட்டுக்குடும்ப உறவுமுறை நிலைத்து நிற்கிறது. யார் வந்தாலும் வரவேற்று, உபசரித்து உணவு கொடுத்து அகமும், முகமும் மகிழ்ந்து அளவளாவும் குணம் கிராமங்களில் தொடர்ந்துகொண்டிருக்கின்றது. இதைத்தான் விவேகசிந்தாமணி ஒப்புடன் ‘முகமலர்ந்து உபசரித்து உண்மை பேசி உப்பிலாக் கூழிட்டாலும் உண்பதே அமிர்தமாகும்’ என்றது.

## சொலவடைகளில் சூட்சுமம்

சிறுவிதைக்குள் பெருவிருட்சம் அடைபட்டிருப்பதைப்போல, ஒற்றை வரிக்குள் ஓராயிரம் பொருளைப் பொதித்து வைத்திருப்பார்கள் கிராமத்துப் பெரியவர்கள். போகிற போக்கில் பேச்சில் அவை வந்து விழும். கேட்கும் செவிகளில் புத்துணர்வு எழும். ஒரே நேரத்தில் இரண்டு வேலைகளைச் செய்ய முடியும் என்பதை ‘ஆடு மேய்ச்ச மாதிரியும், அண்ணனுக்குப் பொண்ணு பாத்த மாதிரியும்’ என்ற சொலவடையில் சொல்லிவிடுவார்கள். பெண்களுக்குள் அவ்வப்போது நடக்கும் அடிகுழாய்ச் சண்டையில் ‘மாங்காயத் தின்னுட்டு உங்கம்மா மடியில பெத்தாக! தேங்காயத் தின்னுட்டு எங்கம்மா என்னைத் தெருவிலயா பெத்தாக’ என போகிற போக்கில் உதிர்த்துவிட்டுச் செல்வார்கள். ஒரு ஊரில் இரண்டு விருந்தாளிகள் வீட்டிற்குச் சென்ற ஒருவன் இரண்டு வீட்டிலும் சாப்பிடாமல் வந்த நிலையை, ‘ரெண்டு வீட்டு விருந்தாளி கெண்ட வீங்கிச் செத்தானாம்’ என்பார்கள். இப்படியாகக் கிராமத்து வாழ்வியல் பயணத்தில் சொலவடைப்பூக்கள் அவ்வப்போது பூத்துக்கொண்டேதான் இருக்கின்றன.

## திருவிழாக் கொண்டாட்டம்

ஆண்டு முழுவதும் ஓடியாடி உழைத்துக் களைத்த உள்ளங்களுக்கு உற்சாகம் தருவதாக அமையும் ஊர்த்திருவிழா. ‘ஊருடன் கூடி வாழ்’ என்பதற்கேற்ப திருவிழாக்களில் ஊரே உற்சாகமாகும். வெள்ளையடிக்கப்பட்ட வீடுகளும், வேப்பிலைத் தோரணங்களும், வண்ண ஒளி விளக்குகளும், மேளச் சத்தமும், கும்மிப் பாட்டும், குலவைச் சத்தமும், முளைப்பாரி தூக்குவதும் என ஊரே மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்கும். ஓராண்டு உழைப்பின் உன்னதத்தை இந்தத் திருவிழாக்களில் காணலாம். அன்பைப் பேணலாம். வேலைக்காக வேறு ஊருக்குச் சென்றவர்கள், இரைதேடப் பறந்த பறவை மாலையில் கூடடைவதைப்போல, திருவிழா நேரத்தில் சொந்த ஊருக்கு வந்துவிடுவார்கள். ஓராண்டு சம்பாதித்த பணத்தின் சிறுபகுதியை ஊருக்காகச் செலவுசெய்து மகிழ்வார்கள்.

## இயற்கை இன்பம்

செயற்கை அதிகம் நுழையாத, இயற்கை மட்டுமே எங்கும் நிறைந்திருக்கின்ற இடம்தான் கிராமம். அங்குப் பேரிரைச்சல் இல்லை. பெருங்கூட்டம் இல்லை. புகை மூட்டம் இல்லை. அவசர ஓட்டம் இல்லை. காற்றில் மிதந்துவரும் பறவைகளின் சத்தம் நித்தம் நித்தம் கேட்கும். ‘காக்கைக் குருவிகள் எங்கள் சாதி’ என்ற பாரதியின் வரி மனதில் வந்துபோகும். மண்ணில் மணமும், கண்ணில் கருணையும் உள்ள ஓரிடம் இந்தப் பூமிப்பந்தில் உள்ளதென்றால், அது கிராமங்கள் மட்டுமே! கிராமத்து மக்களின் மனக்கதவைத் திறக்கும் திறவுகோலாக அன்பு என்றும் நிறைந்துள்ளது. கிராமங்கள் வாழ்ந்தால் மட்டுமே நகரங்கள் வாழமுடியும். நமக்கான உணவை மட்டுமல்ல, உணர்வுகளைத் தருவதும் கிராமங்களே!

நன்றி - தினமலர்



## கண்டதும்... கேட்டதும்... பார்த்ததும்...!



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பெயரை சில தமிழ் ஊடகங்கள் கோத்தாபய என்றே பயன்படுத்துகின்றன. இதற்கான காரணம் என்னவென்பது தெரியவில்லை. ஜனாதிபதி தனது முகநூலில் கோட்டாபய என்றே தனது பெயரை பயன்படுத்தினாலும் இந்த ஊடகங்கள் கோத்தாபய என்று பெயரிடுவதை மாற்றாமல் இருக்கின்றன. இப்படியே பயன்படுத்திவிட்டோம் தொடர்ந்து இப்படியே பயன்படுத்துவோம் என்ற முடிவில் அந்த ஊடகங்கள் இருக்கின்றன போலும்.... நாட்டாமை என்பதை நாத்தாமை என்று சொன்னாலும் சொல்வார்கள் போலும்...

- சிவா -
siva@liberty.lk

# அடிப்படைவாத தாக்குதல்களிலிருந்து நாட்டை பாதுகாக்க இராணுவம் தயாராகவே இருக்கிறது

## திருகோணமலையில் இராணுவத்தளபதி சவேந்திர சில்வா தெரிவிப்பு






(அப்துல் சலாம் யாசீம்)

அடிப்படைவாத தாக்குதல்களிலிருந்து நாட்டை பாதுகாக்க இராணுவம் தயாராகவே இருக்கிறது - என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

திருகோணமலை 22ஆவது படைப்பிரிவின் செயற்பாடுகளை பார்வையிடுவதற்காக நேற்று அவர் அந்தப் பிரதேசத்துக்கு சென்றிருந்தார். அதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில், இலங்கையின் பொருளாதாரத்திற்கு வரலாற்று முக்கியத்துவத்தை ஒன்றுசேர்க்கின்ற பிரதேசம் திருகோணமலையாகும். கடந்த 30 வருடங்களாக நிலவிய யுத்த நிலைமைகளின்போது திருகோணமலை பிரதேசத்தையும் மக்களையும் பாதுகாப்பதற்காக முப்படையினர் பெரிதும் பங்களிப்புச் செய்துள்ளார்கள். அதேபோன்று கடந்த வருடம் இடம்பெற்ற அடிப்படைவாத தாக்குதலைபோல ஒரு தாக்குதல் இனிமேலும் எமது நாட்டில் நடைபெறாமல் இருப்பதற்கு எமது இராணுவமும் முப்படையினரும் பல ஏற்பாடுகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இராணுவத்தினர் பொதுமக்களின் நன்மை கருதி பல சமூகசேவைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். அதேபோன்று கொவிட - 19 நோய்த்தொற்று தனிமைப்படுத்தல் விடயத்திலும் பாரிய சேவைகளை செய்துவருகின்றனர்.

கடந்த காலங்களில் இராணுவத்தினர் போதைப்பொருள் கடத்தல் வியாபாரிகளுடன் தொடர்பைப் பேணிய சந்தர்ப்பங்களும் இருக்கின்றன. இனிவரும் காலங்களில் போதைப்பொருள் தொடர்பில் யாராவது இனங்காணப்பட்டால் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், இராணுவத்திலிருந்து வெளியேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இதுவரையில் அநேகமான அதிகாரிகளுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தக் குறுகிய காலப்பகுதியில் பதவி உயர்வு தொடர்பில் பிரச்சினை ஏற்பட்டிருந்தது. இந்த நிலை இராணுவத்தில் மாத்திரமல்ல, சகல துறைகளிலும் இந்தப் பிரச்சினை காணப்படுகிறது. முன்னேற்றமே சகலரதும் எதிர்பார்ப்பாக இருக்கிறது. ஆகவே, இராணுவ வீரர்களுக்கான பதவி உயர்வு தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டுவருகிறது.

சுகாதார அமைச்சைபோன்று நாட்டின் ஒவ்வொரு பிரதேசங்களிலும் வைத்தியசாலைகளை அமைப்பதற்கான பொருளாதார வசதி எமக்கில்லை. ஒவ்வொரு பிரதேசங்களிலும் இருக்கும் இராணுவ வீரர்களின் தொகைக்கமைவாகவே இராணுவ வைத்தியசாலைகள் அமைக்கப்படுகின்றன. அவ்வாறான பிரதேசங்களில் வைத்தியசாலைகள் இருக்கின்றன. தற்போது கண்டி மாவட்டத்தில் புதிய இராணுவ வைத்தியசாலையை அமைப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. எதிர்காலத்தில் மேலும் இராணுவ வைத்தியசாலைகளை அமைக்கவேண்டிய தேவை ஏற்படுமாக இருந்தால் அதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

எம்.டி. நியூ டயமன்ட் கப்பலின் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இராணுவத்தினர் பெரிதும் பங்களிப்பு செய்திருந்தனர். இந்தியாவின் கடற்படையினர் உள்ளிட்ட பிறநாடுகளின் உதவிகளும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன என்று சுட்டிக்காட்டினார்.



தொழிலற்ற உயர் தேசிய டிப்ளோமாதாரிகள் சங்கத்தினர் நேற்று ஜனாதிபதி செயலகத்துக்கு அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது...
[படப்பிடிப்பு : லலித் பெரேரா]

# சுதந்திரத்திற்குப் பின்னர் அதிகளவு கடன்பெறும் வருடமாக பதிவாகிறது 2020ஆம் ஆண்டு!

## பொருளாதார நிபுணர்கள் தகவல்

சுதந்திரத்தின் பின்னரான 72 வருட இலங்கை வரலாற்றில் அதிக கடனை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் ஆண்டாக 2020ஆம் ஆண்டு பதிவாகலாம் என அரச உள்ளக தகவல்களை மேற்கோள்காட்டி பொருளாதார நிபுணர்கள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

பொருளாதார நிபுணர்களின் தகவல்களுக்கு அமைய, இலங்கை 2020ஆம் ஆண்டு 3000 பில்லியன் ரூபா கடனை பெறவுள்ளதாக கூறப்படுகின்றது.

2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் ஏப்ரல் மாத இறுதி வரையான 4 மாத காலப் பகுதியில் மாத்திரம் கடன் வரையறை 755 பில்லியன் ரூபா என நாடாளுமன்ற உத்தியோகபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், மே மாதம் முதலாம் திகதி முதல் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி வரையான நான்கு மாதங்களில் எவ்வளவு தொகை கடனாக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பது தொடர்பில் இதுவரை அறிவிக்கப்படவில்லை.

நிதி நிர்வாகத்தை மேற்கொள்ளும் நிறுவனமான நாடாளுமன்றத்திற்கு கூட இந்த விடயம் இதுவரை தெரிவிக்கப்படவில்லை.

செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரை கடன் வரையறை 1300 பில்லியன் ரூபா என நாடாளுமன்றத்தில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் அனுமதி வழங்கப்பட்டது.

2020 ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் ஏப்ரல் மாதம் இறுதி வரையான 4 மாதங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட 755 பில்லியன் ரூபாவிற்கு சமமான தொகையையே, மே மாதம் முதல் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி வரையான 4 மாதங்களில் பெற்றுக்கொண்டிருப்பார்கள் என்று கருதப்படும்பட்சத்தில் , இந்த ஆண்டின் மொத்த கடன் தொகை 2810 பில்லியன் ரூபாவாகின்றது,

தற்போதைய அரசாங்கத்தின் நிதி நிர்வாகத்தின் முகாமைத்துவத்திலுள்ள பிரச்சினையே இவ்வாறு கடன் தொகையை பெற்றுக்கொள்ள காரணம் என பொருளாதார வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

2019ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவிப்பிரமாணம் செய்துக்கொண்டதன் பின்னர் இரத்துச் செய்யப்பட்ட வரிகளினால் மாத்திரம் அரசாங்கத்திற்கு 600 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த ஆண்டு மார்ச் 20 முதல் கொவிட் 19 காரணமாக ஏற்பட்ட முடக்க நிலைமையினால் எதிர்நோக்குகின்ற பொருளாதார நெருக்கடியே, இவ்வாறு பெருமளவு கடனை பெற்றுக்கொள்ள நேரிட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

# மணல் கடத்தல் முறியடிப்பு: உழவு இயந்திரங்களுடன் மூவர் கைது!

(வவுனியா)

மாங்குளம் - பனிக்கன்குளம் கனகராயன் ஆற்றுப் பகுதியிலிருந்து சட்டவிரோத மணல் கடத்தல் மேற்கொண்ட குற்றச்சாட்டில் உழவு இயந்திரங்களுடன் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். பனிக்கன்குளம் பகுதியிலுள்ள கனகராயன் ஆற்றுப் பகுதியிலிருந்து சட்டவிரோதமாக மணல் கொண்டுசென்றவர்களை நேற்று முன்தினம் இரவு மூன்று உழவு இயந்திரங்களுடன் மாங்குளம் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். வனவளப் பாதுகாப்புத் திணைக்கள உத்தியோகத்தர்களுடன் மாங்குளம் பொலிஸார் மேற்கொண்ட கூட்டு நடவடிக்கையின்போதே மணல் கொண்டுசென்ற சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் சில காலமாக சட்டவிரோத மணல் கடத்தலில் ஈடுபட்டதாகவும், ஆற்றிலிருந்து மணல் அகழ்ந்ததாகவும், சட்டவிரோதமாக மணல் கொண்டுசெல்லப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர்கள் 19, 31, 33 வயதுக்குட்பட்டவர்கள் என்றும் மாங்குளத்தில் வசிப்பவர்கள் என்றும் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகவும் மாங்குளம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# நாடாளுமன்ற வீதியின் தியத உயனவிற்கு அருகில் வெட்டுக்காயங்களுடன் ஆணொருவரின் சடலம் மீட்பு



நாடாளுமன்ற வீதியின், பொல்துவ பாலத்திற்கு அருகில் வெட்டுக்காயங்களுடன் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பொரளை - கொட்டாவ வீதியின் தியத உயனவிற்கு அருகில் உள்ள பொல்துவ பாலத்தின் கீழ் நீரில் மிதந்துகொண்டிருந்த நிலையில் குறித்த நபரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

ஹோகந்தர – சிங்கபுர பகுதியைச் சேர்ந்த ஆண் ஒருவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் கடந்த 7ஆம் திகதியிலிருந்து காணாமல் போயிருந்ததாக அவரது குடும்பத்தினரால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வெலிக்கடை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# காட்டு யானை தாக்கியதில் விவசாயி பலி

அம்பாறை மல்வத்தை மல்லிகைத்தீவுப் பகுதியில் காட்டு யானை தாக்கியதில், கீரை வகை பிடுங்கச் சென்ற விவசாயியொருவர் பலியானாரென சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில், கணபதிபுரம் பகுதியில் வசிக்கும் எஸ்.சோதிலிங்கம் (வயது 59) என்ற விவசாயியே உயிரிழந்துள்ளார்.

இவர் தனது மல்வத்தை கணபதிபுரம் கிராமத்திலிருந்து மல்லிகைத்தீவு வயல்பகுதிக்குள் பொன்னாங்கன்னி கீரை பிடுங்கிக்கொண்டிருந்த வேளையிலேயே, அவ்விடத்துக்கு வந்த காட்டு யானை தாக்கியதால் உயிரிழந்தார் என பொலிஸாரின் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.



அதிக மழைவீழ்ச்சியின் காரணமாக கொழும்பு ராஜகிரிய, மாதின்னாகொட உள்ளிட்ட மேலும் பல பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியிருந்ததை படங்களில் காணலாம். [படப்பிடிப்பு : பிரதீப் தம்பரகே]

# 302 பட்டதாரிகள் கடமை ஏற்றுள்ளனர்; 41 பேர் சமூகமளிக்கவில்லை!

(வவுனியா)

அரசால் நடைமுறைப்படுத்தப்பட்ட 50 ஆயிரம் பட்டதாரிகளுக்கான தொழில்வாய்ப்பில் வவுனியா மாவட்டத்தில் தொழில்வாய்ப்புகளைப் பெற்றுக்கொண்ட 41 பேர் இன்னும் கடமைகளைப் பொறுப்பேற்கவில்லை - என்று வவுனியா மாவட்ட செயலகத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொழில் பெறும் 50 ஆயிரம் பட்டதாரிகளின் பெயர் விபரங்கள் உள்ளூராட்சி மாகாண சபை அமைச்சின் இணையதளத்தில் அண்மையில் வெளியிடப்பட்டிருந்தன. அந்தவகையில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 343 பட்டதாரிகளின் பெயர் விபரங்கள் அதில் வெளியிடப்பட்டிருந்தன. அவர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வு வவுனியா மாவட்ட செயலகத்தில் கடந்த 2ஆம் திகதி இடம்பெற்றது.

நியமனம் வழங்கப்பட்டு 7 நாட்கள் கடந்தும் தொழில்வாய்ப்பைப் பெற்றுக்கொண்ட 41 பட்டதாரிகள் இதுவரை கடமைக்கு சமுகமளிக்கவில்லை. குறிப்பாக, வவுனியா பிரதேச செயலகப் பிரிவில் 37 பேரும், வவுனியா தெற்கில் 2 பேரும், வவுனியா வடக்கு பிரிவில் 2 பேரும், கடமைகளைப் பொறுப்பேற்காத நிலையில், செட்டிகுளம் பிரிவில் தொழில்வாய்ப்பைப் பெற்ற அனைத்துப் பட்டதாரிகளும் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளனர்.



இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் தஞ்சா கொங்கிஜ்ப்புக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று அலரிமாளிகையில் இடம்பெற்றபோது...

# தோட்ட நிர்வாகத்துக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் முறுகல்நிலை;
## இராஜாங்க அமைச்சர் ஜீவனின் தலையீட்டால் காணிப்பிரச்சினைக்குத் தீர்வு!

(க.கிஷாந்தன்)

கம்பளை, உலப்பனை மாவில தோட்டத் தொழிலாளர்கள் காலம் காலமாக அதே தோட்டத்தில் தொழில்செய்து வருகிறார்கள். ஆனால், இவர்களுக்கு வீடமைப்பதற்குக்கூட ஒரு காணியை தோட்ட நிர்வாகம் வழங்க வில்லை. மேலும் இதே தோட்டத்தில் தொழில் புரியும் நிர்வாக உத்தியோகத்தர்களுக்கு தோட்டக் காணியை திட்டமிட்டு பிரித்துக் கொடுக்க எடுத்த முயற்சியினால் நிர்வாகத்துக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபைக்கு (ஜனவசம) சொந்தமான மேற்குறித்த மாவில தோட்டத்தில், காலம் காலமாக உழைத்து வரும் தொழிலாளர்களுக்கு ஒரு அங்குல காணியேனும் இதுவரைக்கும் நிர்வாகம் வழங்கவில்லை. ஆனால், ஜனவசம அங்குள்ள சேவையாளர்களுக்கு தான்தோன்றித்தனமாக வழங்க எடுத்த முயற்சி வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.



இது தொடர்பில் இ.தொ.காவின் பொதுச் செயலாளரும், தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கும் அத் தோட்ட தொழிலாளர்களுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பையடுத்து இதற்கான காத்திரமான தீர்வை அடையும் பொருட்டு பெருந்தோட்டத்துறை அமைச்சர் கலாநிதி ரமேஷ் பத்திரனவின் கவனத்திற்கு கொண்டு சென்றதையடுத்து, நேரடியாக மாவில தோட்ட மக்களுடனும் சம்பந்தப்பட்ட தோட்ட நிர்வாகத்துடனும் கலந்துரையாடி தோட்ட சேவையாளர்களுக்கு வழங்கவிருந்த காணி அமைச்சரின் தலையீட்டால் உடனடியாக இடைநிறுத்தப்பட்டது.

இச்சந்திப்பின்போது இ.தொ.கா.வின் உப தலைவர் துரை மதியுகராஜா, இ.தொ.கா.வின் சர்வதேச விவகாரங்களுக்குப் பொறுப்பாளரும், உதவிச் செயலாளருமான பாரத் அருள்சாமி ஆகியோருடன் சம்பந்தப்பட்ட தோட்ட தொழிலாளர்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# ஹட்டன் – கொழும்பு பிரதான வீதியில் நிலம் தாழிறக்கம்

(ஹட்டன்)

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக நாட்டின் பல பகுதிகளில் மழை பெய்துவருகிறது. இந்நிலையில், கடந்த சில தினங்களாக நுவரெலியா மாவட்டத்திலும் பல இடங்களில் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இந்நிலையில், ஹட்டன் – கொழும்பு பிரதான வீதியில் குயில்வத்தை 66 மைல் கல்லுக்கு அருகாமையிலுள்ள வீதியின் ஒரு பகுதி மீண்டும் தாழிறங்கியுள்ளது. இப்பகுதி கடந்த ஒரு சில மாதங்களுக்கு முன்னர் தாழிறங்கியிருந்தது. எனினும், உரிய முறையில் அவ்வீதி சீரமைக்கப் படாததால் தற்போது பாரியளவில் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன.



எனவே, குறித்த வீதியில் பயணஞ்செய்யும் பாரஊர்திகள் இவ்விடத்தில் விபத்திற் குள்ளாகுவதற்கான சூழ்நிலைகள் காணப் படுவதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

குறித்த இடத்தில் சுமார் ஒன்றரை அடிவரை நிலம் தாழிறக்கத்திற்கு உட்பட்டுள்ளதுடன், ஒருவழிப் பாதையிலும் பாரிய வெடிப்புகள் காணப்படுகின்றன.

எனவே, குறித்த இடத்தில் விபத்தொன்று ஏற்படுவதற்கு முன் உரிய அதிகாரிகள் நடவடிக்கைகளை எடுக்கப்பட வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.




# அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் நண்பரெனக் கூறி ஆசிரியை மற்றும் பிரதேசவாசிகளுக்கு அச்சுறுத்தல்
## கைக்குண்டு ரவைகளுடன் இரட்டைச் சகோதரர்கள் கைது!

(இரத்தினபுரி)

விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சரான நாமல் ராஜபக்ஷவின் நண்பர் எனக்கூறி, அவரின் பெயரைப் பயன்படுத்தி, ஆசிரியை ஒருவருக்கும் பிரதேச மக்களுக்கும் மரண அச்சுறுத்தல் விடுத்த இரட்டை சகோதரர்களை குருவிட்ட புஸ்ஸெல்ல பகுதியில் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். குருவிட்ட பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டையடுத்து மேற்படி சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது:

இப்பிரதேசத்திலுள்ள ஆசிரியர் ஒருவருடன் பகைமை உணர்வுடன் இருந்துவந்த இவர், தான் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் நெருங்கிய நண்பர் எனவும் பிரதமர் மற்றும் நாமல் ராஜபக்ஷவுடன் எடுத்துக்கொண்ட புகைப்படங்களையும் காட்டி இவ்வாறு அரசியல் உயர்மட்டத்தினருடன் தொடர்புகள் வைத்துள்ள தன்னால் எதுவும் செய்யமுடியும் எனவும் ஆசிரியைக்கு மரண அச்சுறுத்தல் விடுத்துள்ளார். அத்துடன், பிரதேச மக்களையும் இதே பாணியில் அச்சுறுத்தி வந்துள்ளார்.

இதையடுத்து அவரது வீட்டை சோதனையிட்ட பொலிஸார், அவர் இரகசியமாக மறைத்து வைத்திருந்த கைக்குண்டு ஒன்றையும், ரி-56 ரக துப்பாக்கி ரவைகளையும் மீட்டுள்ளனர்.

இதேவேளை, பிரதேச மக்களின் முறைப் பாட்டையடுத்து, இவரது சகோதரர் ஒருவரையும் கைதுசெய்துள்ள பொலிஸார், இவர் வெளி நாடுகளில் தொழில்வாய்ப்புகள் பெற்றுத்தருவ தாகக்கூறி, சிலரிடம் பணம் பெற்றுக் கொண்டுள்ளதாகக் கூறப்படும் முறைப்பாடுகள் தொடர்பாகவும் விசாரணைசெய்யப்பட்டு வருவதாகவும் குருவிட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திலக் ரத்னாயக்க தெரிவித்தார்.

நடத்தப்பட்ட விசாரணைகளிலிருந்து இவர்கள் இருவருக்கும் எந்த அரசியல்வாதிகளினது தொடர்புகளும் இல்லை எனவும் இவர் களது சொந்த நலன்களுக்காக அரசியல்வாதிகளின் பெயர்களைப் பயன் படுத்தி அப்பாவி மக்களை அச்சுறுத்தி வந்துள் ளதாகவும் இவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மூன்றுமாடிக் கட்டடத்திலிருந்து தவறி வீழ்ந்த இளைஞன் பலி!



(தலவாக்கலை)

கொழும்பு வெள்ளவத்தை பகுதியில் மூன்றுமாடிக் கட்டிட நிர்மாணத்தளத்தில் வேலை செய்துகொண்டிருந்த இளைஞர் ஒருவர் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

தலவாக்கலை, கிறேட் வெஸ்டன் தோட்டத்தைச் சேர்ந்த தனபால் ஜீவா அபி லேஷ் குமார் (வயது - 17) என்பவரே நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞன் தொழில் நிமித்தம் கொழும்பு வெள்ளவத்தை பகுதிக்குச் சென்ற நிலையில், அங்கு மூன்றுமாடிக் கட்டிட நிர்மாணத் தளத்தில் வேலை செய்துகொண்டிருக்கும்போது, தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளதாக இளைஞனின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

சடலம் தற்போது கொழும்பு தெற்கு களு போவில போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனை யின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்படவுள்ளதாக தெரியவருகிறது.

# சப்ரகமுவ மாகாணத்தில் இரு மாவட்டங்களில் 7 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு மண்சரிவு அபாயம்
## எஹலியகொட பிரதேசத்திற்கு 'சிவப்பு' எச்சரிக்கை

(இரத்தினபுரி)

சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களில் 7 பிரதேச செயலகப் பிரிவுகளில் மண்சரிவு அபாயம் நிலவுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களின் கட்டிடவியல் ஆய்வு நிலையங்கள் இத்தகவலை வழங்கியுள்ளன.

எனவே, இப்பிரதேச செயலகப் பிரிவுகளில் சிவப்பு எச்சரிக்கை மற்றும் ஏற்கனவே மண்சரிவு ஏற்படலாம் என அறிவிக்கப்பட்டு, அடையாளப்படுத்தப்பட்டுள்ள இடங்களிலுள்ள மக்கள் உடனடியாக இருப்பிடங்களிலிருந்து பாதுகாப்பான இடங்களில் தங்குமாறு பிரதேச செயலாளர்கள் மற்றும் கிராமசேவை அதிகாரிகள் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தின் இரத்தினபுரி, எஹலியகொடை, எலபாத, கிரியெல்ல மற்றும் அயகம ஆகிய பிரதேச செயலகப் பிரிவு களிலேயே இந்த அச்சுறுத்தல் நிலைமை ஏற்பட்டுள்ளது. இதில் எஹலியகொடை பிரதேச செயலகப் பிரிவுக்கு சிவப்பு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை, கேகாலை மாவட்டத்தில் தெஹியோவிட்ட, யட்டியாந்தோட்டை ஆகிய செயலகப் பிரிவு களில் மண்சரிவு ஏற்படலாம் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரதேசங்களில் மண்சரிவு ஏற்படலாம் என ஏற்கனவே அடையாளப்படுத்தப்பட்ட பிரதேசங்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# ஹட்டன் – கொழும்பு பிரதான வீதியில் மரம் முறிந்து வீழ்ந்ததில் போக்குவரத்து தடை

(ஹட்டன்)

வட்டவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹட்டன் – கொழும்பு பிரதான வீதியில் கரோலினா பகுதியில் நேற்று அதிகாலை பாரிய





மரமொன்று முறிந்து வீழ்ந்ததில் ஹட்டன் – கொழும்பு, மற்றும் ஹட்டன் – கண்டி ஊடான போக்குவரத்து தடைப்பட்டது.

சுமார் 30 நிமிடத்திற்கும் மேல் இவ்வாறு போக்குவரத்து தடைப்பட்டிருந்தது. இதனால் கொழும்பு, ஹட்டன், கண்டி வைத்திய சாலைகளுக்குச் சென்ற நோயாளர்கள் மற்றும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கினர்.

இதனையடுத்து வட்டவளை பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து வீதியின் குறுக்கே வீழ்ந்த மரத்தை வெட்டி அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்ததையடுத்து போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது.

அத்தோடு மரம் முறிந்து வீழ்ந்ததன் காரணமாக தொலைபேசி கம்பங்கள் மற்றும் மின்சாரக் கம்பங்களும் சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரஸ்பி - அவரவத்தை தோட்டத் தொழிலாளர்கள் நிர்வாகத்துக்கு எதிராக வேலைநிறுத்தப் போராட்டம்

(மஸ்கெலியா)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஸ்ரஸ்பி தோட்ட அவரவத்தைப் பிரிவிலுள்ள சுமார் 120 தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகத்துக்கு எதிராக கடந்த இரு தினங்களாக வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இத்தொழிலாளர்கள் பணிபுரிந்த நாட்களுக்கு வழங்கப்படும் முழுநேர வேதனத்தைக் குறைத்து, அரை நாள் வேதனம் வழங்கப்பட இருப்பதைத் தொடர்ந்து, இப்போராட்டத்தை முன்னெடுப்பதாக போராட்டத்தில் கலந்துகொண்ட தொழிலாளர்கள் குறிப்பிட்டனர்.

தோட்டத் தொழிலாளர்களின் மாதாந்த ஊதியத்திற்கான சம்பளச்சிட்டை ஊதியம் வழங்கும் நாளுக்கு முதல் நாள் வழங்கப் படுவதால் இது தொடர்பில் முன்னரே அறியமுடிந்தது என தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சிலர் நாளொன்றுக்கு 18 கிலோ தேயிலை கொழுந்து பறிக்கவேண்டும். இருப்பினும், அதற்கு மேலதிகமாக பறித்த கொழுந்திற்கு வேதனம் வழங்கப்படவில்லை என்றும் குற்றஞ்சாட்டினர்.

இதுதொடர்பில் தமக்கு நியாயமான தீர்வு வேண்டுமென கோரிக்கை முன்வைக்கின்றனர்.

# கண்டி பதியுதீன் மகளிர் கல்லூரிக்கு பஸ் அன்பளிப்பு





(கண்டி)

கண்டி பதியுதீன் மஹ்மூத் மகளிர் கல்லூரிக்கு சுமார் 80 இலட்சம் ரூபா பெறுமதியான பஸ்ஸொன்று ஜப்பானிலுள்ள இலங்கை நலன் விரும்பிகளால் அன்பளிப்புச்செய்யப்பட்டது.

இது தொடர்பாக கல்லூரியில் இடம்பெற்ற வைபவத்தில் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் சார்பாக செயலாளர் மொஹமட் மரைக்கார் பஸ்ஸின் திறப்பை அதிபர் திருமதி சியானா றஹீமிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் கண்டி வலயக் கல்விப் பணிப்பாளர் எம். டப்ளியூ.விஜேரத்ன மற்றும் உதவிப் பணிப்பாளர் ஏ. அமீன் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

# இரத்தினபுரி மாவட்ட செயலகத்தால் வீதிகளின் விபரங்கள் அடங்கிய நூல் மாகாண ஆளுநரிடம் கையளிப்பு!

(இரத்தினபுரி)

இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட மாவட்ட வீதிகளின் விபரங்கள் அடங்கிய நூல் ஒன்றை இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் திட்ட மிடல் பிரிவு பணிப்பாளர் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவிடம் நேற்று கையளித்தார்.

2019ஆம் ஆண்டின் புதுப்பிக்கப்பட்ட விபரங்களின்படி தயாரிக்கப்பட்ட மேற்படி



நூலில், இரத்தினபுரி மாவட்டத்தின் தேசிய வீதிகள் மற்றும் மாகாண சபையினால் அமைக்கப்பட்ட வீதிகள் என்பவற்றின் தகவல்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இதன்போது சப்ரகமுவ மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சாமர பமுனு ஆராச்சி மற்றும் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# இரத்தினபுரி மாவட்டத்தில் 8 மாதங்களில் போதைப்பொருள் தொடர்பில் 4447 வழக்குகள்: 1095 பேர் கைது

(இரத்தினபுரி)

இவ்வருடத்தில் கடந்த எட்டு மாதங்க ளில் மாத்திரம் இரத்தினபுரி மாவட்ட பொலிஸ் பிரிவுகளிலிருந்து 4,447 போதைவஸ்துகள் தொடர்பான வழக்குகள் தொடரப்பட்டுள்ளதுடன், இவற்றுடன் சம்பந்தப்பட்ட 1,095 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் இரத்தினபுரி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியால யத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கஞ்சா, ஹெரோயின், கசிப்பு கோடா ஆகிய போதைப்பொருட்கள் இவ்வருடத்தின் எட்டு மாத காலப்பகுதிக்குள் குறித்த மாவட் டத்தில் மீட்கப்பட்டு நீதிமன்றத்தில் பொறுப் பளிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# சீரற்ற காலநிலையால் கண்டி மாவட்டத்தில் 135 குடும்பங்களில் 508 பேர் பாதிப்பு

(கண்டி)

நாட்டில் கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் அடைமழை காரணமாக கண்டி மாவட்டத்திலுள்ள 10 பிரதேச செய லாளர் பிரிவுகளிலும் மொத்தம் 508 பேர் பாதிப்படைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கண்டி மாவட்டத்திலுள்ள மினிபே பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த 99 குடும்பங்களில் 374 பேரும், பாத்த ஹேவாஹெட்ட பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த 12 குடும்பங்களில் 46 பேரும், உடதும்பறை பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த 8 குடும்பங்களில் 30 பேரும், மெததும்பறை பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த 3 குடும்பங்களில் 6 பேரும், உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த 4 குடும்பங்களில் 14 பேரும், ஹத்தரலியத்தை பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த 3 குடும்பங்களில் 11 பேரும், தெல்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த 2 குடும்பங்களில் 8 பேரும், பூஜாப்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த 2 குடும்பங்களில் 9 பேரும், உடுநுவர பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த ஒரே குடும்பத்தில் 6 பேரும், கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த ஒரே குடும்பத்தில் 5 பேருமாக மொத்தம் 135 குடும்பங்களைச் சேர்ந்த 508 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

அதேநேரம், 130 வீடுகள் பகுதியள வில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கண்டி மாவட்ட செயலாளர் திஸ்ஸ கருணாரத்ன பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாடுபூராகவும் ஐயாயிரம் குளங்கள் உடனடியாக புனர்நிர்மாணம்!

## ஜனாதிபதி கோட்டாபய பணிப்புரை

புராதன தொழில்நுட்பம் மற்றும் நவீன விஞ்ஞான பொறிமுறைகளினூடாக நாடுபூராகவும் ஐயாயிரம் குளங்களை உடனடியாக புனர்நிர்மாணம் செய்வதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார். அத்துடன், நாடளாவிய ரீதியில் கைவிடப்பட்டுள்ள வயல்கள் 1,20,000 ஏக்கர்கள் நிலப்பரப்பில் ‘தேசிய உணவு உற்பத்தி பங்களிப்பு வேலைத்திட்டம்’ நடைமுறைப்படுத்தப்படும். குளங்களை புனர்நிர்மாணம் செய்யும் செயற்றிட்டத்தை துரிதப்படுத்துவதற்காக சிவில் பாதுகாப்புப் படையினரின் ஒத்துழைப்பும் பெற்றுக்கொள்ளப்படும்.

கிராமிய வயல்கள் சார்ந்த குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் எதிர்கால திட்டங்கள் தொடர்பாக ஜனாதிபதியின் தலைமையில் நேற்றுமுன்தினம் முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் உத்தேசிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

“இதற்கு முன்னரும் குளங்களை புனர்நிர்மாணம் செய்யும் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அது நிபுணர்களினதும் மக்களினதும் பலத்த விமர்சனத்திற்குள்ளாகியது. குளங்களை தோண்டி ஆழப்படுத்தினாலும் நீரை தேக்கி வைக்கக்கூடிய புராதன தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞான ரீதியான முறைகள் பயன்படுத்தாமையே இதற்கான காரணமாகும். அவ்வாறான குறைபாடுகளை களைந்து பொதுவான வழிமுறைகளின் மூலம் அந்தந்த பிரதேசங்களுக்கு மற்றும் குளங்களுக்கு உரிய முறைமைகளின் கீழ் புனர்நிர்மாணம் செய்யப்பட வேண்டும்” என்று ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.



குளங்களில் படிவுகள் நிரம்புவதினால் அவற்றின் கொள்ளளவு குறைந்துள்ளது. அதிகளவான குளங்களில் கரைகள் இடிந்து விழுந்துள்ளன. பெரும்போகத்தை இலக்காகக்கொண்டு அவற்றை உடனடியாக புனர்நிர்மாணம் செய்வதன் அவசியத்தை பொருளாதார புத்தெழுச்சி தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

வயல் நிலங்களுக்கு மாத்திரமன்றி, குடிநீரை பெற்றுக்கொள்ளல் மற்றும் ஏனைய நீர்த் தேவைகளை நிறைவு செய்துகொள்வதற்காகவும் குளத்து நீரை பயன்படுத்துவதன் இயலுமை பற்றி ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.







நீர்ப்பாசன கட்டமைப்பின் மூலம் இயங்குகின்ற விவசாய காணி பயன்பாடு தொடர்பாக காணி உபயோகத் திணைக்களம் மற்றும் கமத்தொழில் திணைக்களம் ஒன்றிணைந்து கணக்கெடுப்பொன்றை செய்துள்ளது. இதன்மூலம் கண்டறியப்பட்ட தகவல்களை அடிப்படையாகக்கொண்டு சிறப்பான முறையில் நீரை முகாமைத்துவம் செய்து ஏனைய போகங்களில் இனங்காணப்பட்ட 17 வகையான பயிரினங்களை பயிரிடுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

குளங்களை புனர்நிர்மாணம் செய்தல், குளம்சார் கைத்தொழில்களை பாதுகாக்கக்கூடிய வகையில் முன்னெடுக்கப்படவேண்டும். விவசாயம்சார் நிறுவனங்கள் மற்றும் விவசாய அமைப்பு களுடன் ஒன்றிணைந்த வகையில் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவது அவசியமாகும். குளங்களை புனர்நிர்மாணம் செய்வதுடன், கால்வாய்கள் உள்ளிட்ட நீர்ப்பாசன கட்டமைப்பை புனர்நிர்மாணம் செய்யுமாறும் ஜனாதிபதி இங்கு ஆலோசனை வழங்கினார்.

பயிர்ச்செய்கைக்கான நீரை வழங்குதல் மற்றும் குடிநீர் விநியோகத்தை நோக்கமாகக்கொண்டு திட்டமிடப்பட்ட ‘உத்துரு மெத மகா எல’ (வடமத்திய பாரிய கால்வாய்) மற்றும் ‘வயம்ப எல’ (வடமேல் கால்வாய்) திட்டங்களை துரிதமாக நிறைவு செய்வதன் அவசியம் பற்றியும் இக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. அதன்கீழ் வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் 1,500 கிராமிய குளங்கள் சார்ந்த 80,000 ஹெக்டெயார் பயிர் நிலங்களில் இரு போகங்களிலும் பயிரிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள நீர்ப்பாசன கட்டமைப்பு மற்றும் ஆறுகளை அண்டிய பகுதியிலுள்ள வன ஒதுக்கீடுகளை ஆறு மாதங்களுக்குள் வர்த்தமானி மூலம் அறிவிப்பது தொடர்பாகவும் இந்நிகழ்வில் கலந்துரையாடப்பட்டது.

வன ஒதுக்கீடுகளுக்குள் உள்ள 500 சிறியளவிலான குளங்களை மிருகங்கள் பயன்படுத்தக்கூடிய வகையில் உடனடியாக புனர்நிர்மாணம் செய்யுமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார். அதற்காக நீர்ப்பாசன, வனஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்புத் திணைக்களம் ஒன்றிணைந்து ஒரு வருட வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படும்.

நீர்ப்பாசனத்துறையில் நீண்டகாலமாக நிலவி வருகின்ற பொறியியலாளர் மற்றும் தொழில்நுட்ப அதிகாரிகள் வெற்றிடங்களை தாமதமின்றி நிரப்புவதன் அவசியம் பற்றியும் கவனம் செலுத்தப்பட்டது.

புதிய விவசாய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் இளம் தொழில் முயற்சியாளர்கள் 500 பேரை சேதனப் பசளை விவசாயத்திற்கு ஈடுபடுத்துவதற்காக திட்டமிடப்பட்டுள்ள (தருன கொவி சௌபாக்கியா, காபனிக்க கொவிபல வெடசட்டஹன) – ‘இளம் விவசாய சுபீட்ச சேதனப்பசளை பயிர் நில வேலைத்திட்டம்’ பற்றியும் இங்கு ஆலோசிக்கப்பட்டது. மாதுறு ஓயவின் தெற்குக் கரையில் 5,000 ஏக்கர்களை உள்ளடக்கிய வகையில் இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கவும் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

அமைச்சர் சமல் ராஜபக்ஷ, இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன, பொருளாதார புத்தெழுச்சி தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர ஆகியோருடன் அமைச்சு, இராஜாங்க அமைச்சுகளினதும் துறைசார் நிறுவனங்களின் அதிகாரிகள், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

# அமைச்சரவைத் தீர்மானங்கள்!

## 2020.09.09 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட தீர்மானங்கள்



### 01. அரச மற்றும் நியதிச்சட்ட அரச நிறுவனங்களின் அறிவித்தல்கள் மற்றும் விளம்பரங்களுக்கு அரச ஊடக நிறுவனங்களைப் பயன்படுத்தல்

அரச ஊடக நிறுவனங்கள் அரச வரவு – செலவில் சுமையற்ற வகையில் – நடத்திச்செல்லும் வகையில் அரச மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் அறிவித்தல்கள் மற்றும் விளம்பரச் செலவுகளில் 25% பெறுமதியான விளம்பர நிகழ்ச்சிகள் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு மற்றும் வரையறுக்கப்பட்ட பத்திரிகைக் கம்பனி போன்ற அரச ஊடக நிறுவனங்கள் மூலம் கட்டாய விளம்பர நிகழ்ச்சிகளை வழங்குவதற்கு வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

### 02. 2020ஆம் ஆண்டுக்கான இலங்கை லிட்ரோ எரிவாயு கம்பனியின் திரவப் பெற்றோலிய வாயு (LPG) உலோக சிலிண்டர்கள் விநியோகத்திற்கான ஒப்பந்தம் வழங்கல்

அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட நிரந்தர பெறுகைக் குழுவின் சிபார்சுகளுக்கமைய இலங்கை லிட்ரோ எரிவாயு கம்பனியின் திரவப் பெற்றோலிய வாயு **(LPG)** உலோக சிலிண்டர்கள் விநியோகத்திற்கான ஒப்பந்தம் கீழ்வரும் வகையில் வழங்குவதற்காக நிதி அமைச்சர் பிரதமரால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

- கிலோகிராம் 2.3, கிலோகிராம் 12.5, கிலோகிராம் 37.5 வகைகளின் கீழ் வரிசைக்கிரகமாக சிலிண்டர்கள் 22,000 உம், சிலிண்டர்கள் 1,05,056 உம் மற்றும் 1,260 அளவுகளில் விநியோகிப்பதற்கான ஒப்பந்தம் அமெரிக்கன் டொலர் 2.18 மில்லியன் தொகைக்கு **M/s, Metal Mate Co. Ltd** இற்கு.
- கிலோகிராம் 5 வகையின் கீழ் 1,17,040 சிலிண்டர்கள் விநியோகிப்பதற்கான ஒப்பந்தம் அமெரிக்கன் டொலர் 1.58 மில்லியன்கள் தொகைக்கு **Sahamitr Presure Containers Public Co. Ltd** இற்கு.

### 03. 2020/21 பெரும்போகச் செய்கைக்கான உரம் குறைவின்றி விநியோகிக்கும் துரித நிகழ்ச்சித்திட்டம்

கடந்த காலங்களில் உர மானியக் கொள்கை அடிக்கடி மாற்றமடைந்ததால், உரம் இறக்குமதிசெய்யும் கம்பனிகளுக்கு சரியான வகையில் கொடுப்பனவு செலுத்தப்படாமை, தரநியமமற்ற உரம் சந்தைக்கு வந்தமை போன்ற காரணங்களால் விவசாயிகள் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டது. அதனால், அந்நிலைமையைத் தவிர்ப்பதற்கு 2020/21 பெரும்போகத்திலிருந்து விவசாயிகளுக்கு உரத்தை வழங்குவதற்கான பொறிமுறையைச் சரியான வகையில் நடைமுறைப்படுத்துவதற்காக கீழ்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

- நெற்செய்கையாளர்களுக்கு இலவசமாக உரம் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் தொடர்ந்தும் அவ்வாறே முன்னெடுத்தல், சூழல் நேய உரப் பாவனையை நெற் செய்கையாளர்களிடம் ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
- 2020/21 பெரும்போகத்திற்கான நெற் செய்கையாளர்களுக்குத் தேவையான உரம் மெட்ரிக் டொன் 2,30,000 இனை அரச உரக் கம்பனி ஊடாக விரைவுபடுத்தி இறக்குமதி செய்தல்.
- நெற்செய்கை தவிர்ந்த ஏனைய செய்கைகளுக்கு 2020/21 பெரும்போகச் செய்கைக்காக உரம் 3,32,000 மெட்ரிக் தொன் தேவைப்படுவதுடன், அதற்கமைய உரக் கம்பனிகளிடம் 40,000 மெட்ரிக் தொன் கையிருப்பை கவனத்திற்கொண்டு, மேலதிமாகத் தேவைப்படும் 3,00,000 மெட்ரிக் தொன் உரம் இறக்குமதி செய்வதற்கு உடன்பாடு தெரிவித்துள்ள உரக் கம்பனிகளுக்கு அனுமதி வழங்கல்.
- தகுதிவாய்ந்த ஏனைய உரக் கம்பனிகளுக்கு அதிகப்படியான 5,000 மெட்ரிக் டொன் அளவின் கீழ் **2020/21** பெரும்போகத்திற்கான உரம் இறக்குமதிக்கு அனுமதி வழங்கல்.
- நெற்செய்கை தவிர்ந்த ஏனைய செய்கைகளுக்குத் தேவையான 50 கிலோகிராம் உரப் பை ஒன்று 1,500.00 ரூபாவுக்கு எந்தவொரு விவசாயிக்கும் சந்தையில் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தல்.

அதற்கமைய, மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நிதி அமைச்சரான பிரதமரும் விவசாய அமைச்சரும் இணைந்து சமர்ப்பித்த கூட்டு பிரேரணை அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.



### 04. 2021ஆம் ஆண்டுக்கான இலவசப் பாடநூல் அச்சிடுதல்

2021ஆம் ஆண்டுக்கான இலவசப் பாட நூல் விநியோகத்திற்கான 400 வகையான நூல்கள் அச்சிடப்பட வேண்டியுள்ளதுடன், அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட நிரந்தர பெறுகைக் குழுவின் சிபாரிசுகளுக்கமைய 106 பாட நூல் வகைகளின் 1,38,90,000 பிரதிகள் 1,093.71 மில்லியன்கள் அரச அச்சகக் கூட்டுத்தாபனத்தின் மூலமும் மேலும் 294 பாடநூல் வகைகள் 2,55,41,500 பிரதிகள் 2,059.01 மில்லியன்கள் திறந்த பெறுகைக் கோரல் முறை மூலம் தெரிவுசெய்யப்பட்ட தனியார் அச்சு நிறுவனங்கள் மூலமும் அச்சிடுவதற்காக கல்வி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

### 05. திங்கட்கிழமையை அரச நிறுவனங்களில் ‘பொதுமக்கள் தினம்’ ஆகப் பிரகடனப்படுத்தல்

அரச நிறுவனங்களில் பல்வேறு சேவைகளைப் பெறுவதற்காக மக்களுக்கு இலகுவான வகையில் புதன்கிழமையை தற்போது ‘பொதுமக்கள் தினம்’ ஆக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

ஆனாலும் திங்கட்கிழமை ‘பொதுமக்கள் தினமாக’ பிரகடனப்படுத்தினால் மக்களுக்கு மிகவும் இலகுவாக அமையுமென யோசனைகள் முன்மொழியப்பட்டுள்ளன.

அதற்கமைய இன்றிலிருந்து திங்கட்கிழமை ‘பொதுமக்கள் தினமாக’ பிரகடனப்படுத்தவும், அனைத்து அரச நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் பொதுமக்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் குறித்த தினத்தில் அலுவலகத்தில் கட்டாயமாக இருத்தல் அவசியமெனவும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

***

# 20ஆவது திருத்தத்தில் மேலும் திருத்தங்கள் இடம்பெறலாம்!

## அமைச்சரவை இணைப்பேச்சாளர் உதய கம்மன்பில தகவல்



அரசியலமைப்பின் 20ஆவது திருத்தத்தை உருவாக்குவதற்காக நியமிக்கப்பட்ட குழு, தேவைப்பட்டால் வரைபில் மேலும் திருத்தங்களை செய்யும் என்று அமைச்சரவை இணைப்பேச்சாளர் அமைச்சர் உதய கம்மன்பில நேற்று தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை மாநாட்டில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிசித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

20ஆவது திருத்தம் வர்த்தமானியிடப்பட்ட திகதியிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் அரசியலமைப்பின் 20ஆவது திருத்தத்தின் வரைபை நாடாளுமன்றத்தில் நீதி அமைச்சர் முன்வைப்பார். இந்த திருத்தத்தின் வரைபு செப்டெம்பர் 03ஆம் திகதி நீதித்துறை அமைச்சினால் வர்த்தமானியிடப்பட்டது.

எதிர்க்கட்சி, நிபுணர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பல்வேறு தரப்பினரிடமிருந்து கருத்துகளைப்பெற இரண்டு வாரங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

நீதி அமைச்சரால் வரைபு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதும், முதல் வாசிப்பு நடைபெறும். இதைத் தொடர்ந்து 20ஆவது திருத்தத்தின் வரைபை பரிசீலனைசெய்ய உயர் நீதிமன்றத்திற்கு மேலும் ஒரு வாரம் ஒதுக்கப்படும். எந்ததெந்த அம்சங்களை திருத்த வேண்டும், அல்லது நீக்க வேண்டும் பொது வாக்கெடுப்பு தேவையா என்பது தொடர்பில் பின்னர் உயர் நீதிமன்றம் அறிவிக்கும்.

உயர்நீதிமன்றத்தின் பரிந்துரையைப்பொறுத்து, திருத்தப்பட வேண்டிய அம்சங்களை, 20ஆவது திருத்தத்தை உருவாக்க நியமிக்கப்பட்ட குழு பரிசீலனை செய்யும். அதற்கமைய இந்த புதிய அரசியலமைப்பு திருத்தத்தில் மேலும் சில திருத்தங்கள் இடம்பெறவதற்கான வாய்ப்பு உள்ளது.

இதேவேளை, 20ஆவது திருத்தத்தை நிறைவேற்ற நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை அரசாங்கம் பெறும் என்றார்.

# சுற்றுலாப்பயணிகளை குழுக்களாக நாட்டுக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை

## - அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு



கட்டுநாயக்க மற்றும் மத்தள விமான நிலையங்களில் விமான சேவையை மீண்டும் ஆரம்பித்ததன் பின்னர் குழுக்களாக வரும் சுற்றுலாப்பயணிகளுக்கு முக்கியத்துவம் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சுற்றுலாப்பயணிகளை குழுக்களாக நாட்டுக்கு அழைத்துவருவதற்கான நடைமுறை வகுக்கப்பட்டிருப்பதாகவும் சுற்றலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.


இலங்கையிலுள்ள மாலைதீவு தூதுவர் ஓமார் அப்துல் ரசாக் மற்றும் பிரசன்ன ரணதுங்கவுக்குமிடையே இடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அமைச்சர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

நாடுகளுக்கிடையிலான சுற்றுலாத் தொழில் துறையை மேம்படுத்துவதற்கு மேற் கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடுவதற்காக இந்தச் சந்திப்பு அமைச்சில் இடம்பெற்றது.

இந்தப் பேச்சுவார்த்தையின்போது மாலைதீவு தூதுவர், விமான நிலையங்களை எப்போது திறப்பதற்கு எதிர்பார்த்துள்ளீர்கள் என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவிடம் கேட்டுக் கொண்டார். கட்டுநாயக்கா மற்றும் மத்தள விமான நிலையங்களை விரைவாக சுற்றுலாப்பயணிகளுக்காக திறப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் அதன்போது கூறினார்.

# வீடொன்றிலிருந்து ஊடகவியலாளர் சடலம் மீட்பு:

## சிலநாட்களுக்கு முன்னர் உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகம்!



தலங்கம பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து உயிரிழந்த நிலையில் ஊடகவியலாளர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் 119 மத்திய நிலையத்துக்கு தலங்கம பொலிஸ் பிரிவுக் குட்பட்ட குமாரகேவத்த, தலங்கம தெற்கில் அமைந்துள்ள வீடொன்றில் நபரொருவரின் சடலம் இருப்பதாக கிடைத்த தகவலுக்கமைய பொலிஸார் இதுதொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

60 வயதுடைய ஸக்கி ஜப்பார் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குறித்த சடலம் அழுகியுள்ள நிலையில், இவர் சிலநாட்களுக்கு முன்னர் உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் ஆங்கில பத்திரிகையொன்றின் ஊடகவியலாளராக பணியாற்றியமை தெரியவந்துள்ளது. இவர் கடந்த சிலதினங்களாக அந்தப் பத்திரிகையின் பணிகளுக்கு வருகை தராமையால், குறித்த ஊடகவியளாரின் சகோதரருக்கு அந்த ஊடக நிறுவனம் இதுதொடர்பில் அறிவித்துள்ளது. அதற்கமைய, நேற்று முன்தினம் உயிரிழந்த ஊடகவியலாளரின் சகோதரர் அவர் தங்கியிருந்த வீட்டுக்குச் சென்று தேடிப்பார்த்துள்ளார். அதன்போது, அவர் அந்த வீட்டின் அறையொன்றில் உயிரிழந்திருந்ததை அவதானித்துள்ளார். அதன்பின்னர் அவர் நேற்று தலங்கம பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

உயிரிழந்தவர் இந்த வீட்டில் தனியாக வசித்துவந்துள்ளார் என்பது பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சடலம் தொடர்பான பிரேத பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தலங்கம பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# திருகோணமலை - திரியாய் ஆத்திக்காடு பிரதேசத்தில் தொல்பொருள் சான்றுகள்

(அப்துல்சலாம் யாசீம்)





திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவின் திரியாய் ஆத்திக்காடு பிரதேசத்தில் மக்கள் பல வருடகாலமாக பயிர் செய்யாது கைவிடப்பட்ட காணிகளை துப்புரவாக்கும்போது தொல்பொருள் சான்றுகள் கிடைக்கப்பெற்றதுடன், அவற்றுக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எஸ்.டி.எம்.அசங்க அபேவர்தனவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து அரசாங்க அதிபர், அதிகாரிகள் சகிதம் குறித்த பிரதேசத்திற்கு நிலைவரங்களை அவதானிக்க களவிஜயமொன்றை மேற்கோண்டார்.

இதன்போது குறித்த பிரதேசத்தில் காணி உரிமங்களை உடைய பொதுமக்கள் தமக்கு இம்முறை பயிர்செய்ய அனுமதியை வழங்குமாறு அரசாங்க அதிபரிடம் வேண்டிக்கொண்டனர்.

இப்பிரதேசத்தில் சில இடங்களில் தொல் பொருள் சான்று கிடைக்கப்பெற்றுள்ளது. எனவே, தொல்பொருள் திணைக்களம் சான்றுகளோடு தொடர்புபட்ட இடங்களை அடையாளப்படுத்தி வகைப்படுத்த வேண்டும். அதற்கு ஒருவாரம் காலஅவகாசத்தை தொல்பொருள் திணைக்களம் கோரியுள்ளது. இச்செயற்பாடு முடிவுற்றதும் குறித்த காணிகளில் உழவு நடவடிக்கைகளை மேற்கொண்டு பயிர்செய்ய உரிய காணி உடைமையாளர்களுக்கு பிரதேச செயலகம் மூலம் அறிவுறுத்தப்படும் என்று இதன்போது அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

தொல்பொருள் சான்றுகள் மிக முக்கியமானது. அவற்றை பாதுகாப்பது அனைவரதும் பொறுப்பாகும். இது தொடர்பில் அனைவரும் அவதானத்துடன் செயற்படுவது இன்றியமையாதது என்று இதன்போது அரசாங்க அதிபர் கேட்டுக்கொண்டார்.

இக்கள விஜயத்தில் குச்சவெளி பிரதேச செயலாளர் தனேஸ்வரன், திணைக்களத் தலைவர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கல்முனை கடற்பரப்பில் எண்ணெய்ப்படிமங்கள் இல்லை: கடற்றொழிலாளர்கள் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடமுடியும்!

## நாரா அமைப்பு உறுதி

கல்முனை கடற் பிரதேசத்தில் எந்தவிதமான மாற்றங்களும் ஏற்படவில்லை என்று நாரா எனப்படும் நீரியல் வள ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அண்மையில் சங்கமன்கந்தை கடற்பரப்பில் இருந்து 38 கடல்மைல் தூரத்தில் பயணித்துக் கொண்டிருந்த எண்ணெய்த் தாங்கிக் கப்பலில் ஏற்பட்ட தீ விபத்தையடுத்து கல்முனை கடற்பரப்பில் சந்தேகத்திற்கிடமான எண்ணெய்ப்படிமங்கள் கடற்றொழிலாளர்களினால் அவதானிக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இதனால் பிரதேச கடற்றொழிலாளர்கள் தொழிலுக்குச் செல்வதைத் தவிர்த்துவந்த நிலையில் குறித்த விடயம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இதனையடுத்து நாரா நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் நவரட்ணராஜா தலைமையிலான அதிகாரிகளுடன் அவசர கலந்துரையாடலை நடத்திய அமைச்சர், உடனடியாக கல்முனை கடற்பிரதேசத்தில் ஆய்வுகளை மேற்கொண்டு விபத்துக்குள்ளான கப்பலிலிருந்து வெளியேறிய ஏதாவது பதார்த்தங்கள் கடல் நீரில் கலந்துள்ளதா என்பதை கண்டறியுமாறு அறிவுறுத்தியிருந்தார்.

இந்நிலையில், நாரா நிறுவனத்தினால் பெரியநீலாணையிலிருந்து ஒலுவில் வரையிலும், அதேபோன்று பொத்துவில், பானமை, திருக்கோவில் ஆகிய கடற் பிரதேசங்களிலும் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

குறித்த ஆய்வுப் பணிகள் 32 கடல்மைல் தூரம் வரை மேற்கொள்ளப்பட்டதுடன், குறித்த கடற்பிரதேசத்திலிருந்து பிடிக்கப்பட்ட மீன்களை ஆய்வுக்குட்படுத்தியதில் அவற்றிலும் எந்தவிதமான மாற்றங்களையும் அவதானிக்க வில்லை எனவும் தெரிவித்துள்ள நாரா நிறுவனத்தின் அதிகாரிகள், பிரதேச கடற்றொழிலாளர்கள் வழமை போன்று தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட முடியும் எனவும் தெரிவித்தனர்.





***ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனின் வெற்றியைக் கொண்டாடும் வகையில் ஜனநாயக மக்கள் முன்னணியின் ஜனநாயக இளைஞர் இணையத்துடனான சந்திப்பு அதன் செயலாளரும் கொழும்பு மாநகரசபை உறுப்பினருமான ஜி.விஷ்ணுகாந்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. இதன்போது தேர்தல் வெற்றி தொடர்பிலும் மாகாண சபைத் தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. இந்நிகழ்வில் சக்சின் திலிப் ஹரன் கணேசனும் கலந்துகொண்டார்.***

# ஆயுதங்களுடன் மூவர் கைது!

திக்வெல்ல பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது ஆயுதங்களுடன் மூன்று சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திக்வெல்ல பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய திக்வெல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போதரக்கந்த பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சுற்றிவளைப்பின்போது ஒரு துப்பாக்கி, 2 கைத்துப்பாக்கி, 27 ரவைகள், ரி-56 ரக துப்பாக்கிகளுக்கான 5 தோட்டாக்கள், ஒரு சட்டவிரோத கத்தி, ஒரு வாள் போன்ற ஆயுதங்கள் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

போதரகந்த, உருகமுவ ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 19, 33 மற்றும் 62 வயதுடைய சந்தேகநபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் நேற்று மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை திக்வெல்ல பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.





***இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே நேற்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்துக் கலந்துரையாடியபோது...***

# குருந்தூர்மலையில் காவலரண் அமைக்க நீதிமன்று இணக்கம்

(முல்லைத்தீவு)



முல்லைத்தீவு, தமிழர்களின் பூர்வீக குருந்தூர்மலையில் காவலரண் அமைப்பதற்கு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்று இணக்கம் தெரிவித்துள்ளதுடன், அப்பகுதியில் இன முறுகலை ஏற்படுத்துகின்ற வகையில், மதங்களுடன் தொடர்புடைய கட்டுமானங்களை மேற்கொள்ள முடியாதெனவும் மன்று உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

ஏற்கனவே முல்லைத்தீவு - குருந்தூர் மலை தொடர்பாக இடம்பெற்ற வழக்கில் வழங்கப்பட்ட நீதிமன்ற கட்டளையின் மூலம் குருந்தூர் மலைப்பகுதியில் கட்டடங்கள் எவையும் இரு தரப்பினராலும் அமைக்க முடியாதென உத்தரவிடப்பட்டுள்ளது.

இருப்பினும், அண்மை நாட்களாக குருந்தூர் மலைப்பகுதியில் கட்டுமான வேலையொன்றை முன்னெடுப்பதற்கு தொல்பொருள் திணைக்களம் முனைப்புக்காட்டி வந்திருந்தது. இதையறிந்த கோவில் நிர்வாகத்தினர் நேற்று முன்தினம் முல்லைத்தீவு நீதிமன்றை நாடியதுடன், நகர்த்தல் பத்திரம் (மோசன்) தாக்கல்செய்து, முன்னைய வழக்கின் மூலம், தற்போது மேற்கொள்ளவுள்ள கட்டுமானம் தொடர்பில் விசாரணைசெய்யுமாறு மன்றை கோரியிருந்தனர்.

அதனடிப்படையில் இந்த வழக்கை ஆராய்ந்த நீதிமன்று, தொல்பொருள் திணைக்கள அதிகாரிக்கு அழைப்பாணை உத்தரவைப் பிறப்பித்ததுடன், நேற்றைய நாளுக்கு வழக்கு விசாரணைக்கான திகதியிடப்பட்டிருந்தது.

அதற்கமைய கோவில் நிர்வாகத்தினர், தொல்பொருள் திணைக்களத்தினர், பொலிஸார் ஆகியோர் மன்றில் ஆஜராகியிருந்த நிலையில், இவ்வழக்கு விசாரணைகள் இடம் பெற்றிருந்தன.

வழக்கு விசாரணையின்போது, காவலரண் அமைப்பதற்கான கட்டுமானங்களை தாம் மேற்கொள்ளவுள்ளதாக தொல்பொருள் திணைக்களத்தினரால் தெரிவிக்கப்பட்டதுடன், அவ்வாறு குருந்தூர் மலைப்பகுதியில் காவலரண் அமைப்பதற்கு மாவட்டசெயலகம் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் என்பன தொல்பொருள் திணைக்களத்திற்கு வழங்கிய அனுமதிப்பத்திரங்களை அவர்கள் மன்றிற்கு சமர்ப்பித்தனர்.

மேலும், கோவில் நிர்வாகத்தினர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகளுள் ஒருவரான கனகரத்தினம் சுகாஷ் இதுதொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில்,

இன்றையநாள் பொலிஸார் மற்றும் தொல்பொருள் திணைக்களத்தினர், எதிர்த் தரப்பினர் சார்பில் மன்றில் ஆஜராகியிருந்தனர். தம்மால் விகாரைகள் எதுவும் கட்டப்படவில்லை எனவும், காவலரண்தான் தம்மால் அமைக்கப்படவுள்ளதாகவும் அவர்களால் மன்றில் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே இந்த வழக்கு விசாரணைகளின் அடிப்படையில், இரு தரப்பினரும் இணங்கியதுபோன்று, இரு தரப்பினரும் மதத்தோடு தொடர்புடைய எவ்வித கட்டுமானங்களையும் அங்கு மேற் கொள்ளப்போவதில்லை என்ற இணக்கத்தை தொடர்வதெனவும் தொல் பொருள் திணைக்களம் அப்பகுதியில் எவ்வித நடவடிக்கைகளை மேற்கொள்கின்றதென ஒவ்வொருமுறையும் அதுதொடர்பான அறிக்கைகளை மன்றுக்கு சமர்ப்பிக்கவேண்டும் எனவும் இணக்கமான முடிவொன்று எடுக்கப்பட்டுள்ளது - என்றார்.

# பலதரப்பட்ட போதைப்பொருட்களுடன் முன்னாள் தபால்சேவகரொருவர் கைது



பத்தரமுல்லை பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது ஹெரோயின், ஐஸ், அடையாளம் தெரியாத போதைமருந்துகளுடன் முன்னாள் தபால் சேவகர் ஒருவர் தலங்கம பொலிஸாரால் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த சந்தேகநபரிடமிருந்து 4 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள், 10 கிராம் ஐஸ் போதைப்பொருள், 5 அடையாளம் தெரியாத போதைப் பொருட்கள், போதைப்பொருள் வியாபாரத்தினூடான உழைக்கப்பட்டதாக கருதப்படும் 45 ஆயிரம் ரூபாய் பணம், 2 கையடக்கத்தொலைபேசிகள் மற்றும் சைக்கிள் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதுதொடர்பான மேலதிக விசாரணையை தலங்கம பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# வீதிகளில் மண் - கல் குவித்துவைப்போர் மீது சட்ட நடவடிக்கை: படிக்கட்டுகளை உடைத்து அகற்ற ஒரு வாரகால அவகாசம்



## கல்முனை மாநகர சபை தீர்மானம்

(கல்முனை)

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட வீதிகளில் பொதுமக்களின் போக்குவரத்திற்கு இடையூறுகளையும் விபத்துகளையும் உயிராபத்துகளையும் ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்படும் முறையற்ற செயற்பாடுகளுக்கு எதிராக சம்பந்தப்பட்டோர் மீது சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு மாநகர சபை தீர்மானித்துள்ளது.

கல்முனை மாநகர சபையில் மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் நடைபெற்ற முகாமைத்துவக் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வீடுகள் மற்றும் கட்டிட நிர்மாணங்களுக்காக பொது வீதிகளில் சீமெந்து கலவையிடல், கொங்க்ரீட் இடுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல், கல், மண், கொங்க்ரீட் கற்கள் மற்றும் நிர்மாணப் பொருட்களை குவித்துவைத்தல் போன்ற செயற்பாடுகளினாலும் வீடுகளுக்கான படிக்கட்டுகள் வீதிகளில் அமைக்கப்பட்டிருப்பதாலும் பொதுமக்களின் போக்குவரத்துகள் பெரிதும் பாதிக்கப்படுவதுடன், வாகன நெரிசல் ஏற்படுவது மாத்திரமல்லாமல், சில சந்தர்ப்பங்களில் உயிராபத்துகளும் ஏற்படுவதாக கல்முனை மாநகர சபைக்கு தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று வருகின்றன.

இவற்றைக் கவனத்திற்கொண்டு, மேற்படி செயற்பாடுகளைக் கண்காணித்து, நடவடிக்கை எடுப்பதற்காக மாநகர சபையில் விசேட குழுவொன்று அமைக்கப்பட்டு, அதன் ஊடாக மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் 77 மற்றும் 78 பிரிவுகளின்கீழ், இச்செயற்பாடுகளில் ஈடுபடுவோருக்கெதிராக கல்முனை நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, தண்டனை பெற்றுக் கொடுப்பதற்கும் அபராதம் விதிப்பதற்கும் இது தொடர்பான வழக்கிற்காக செலவுகளை அவர்களிடமிருந்து அறவிடுவதற்கும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆகையால் வீதிகளில் பொறுப்பற்ற முறையில் முன்னெடுக்கப்படும் மேற்படி செயற்பாடுகளை கண்டிப்பாக தவிர்த்துக் கொள்ளுமாறு கட்டளையிடப்படுவதுடன், வீதிகளில் அமைக்கப்பட்டுள்ள வீட்டுப் படிக்கட்டுகளை ஒரு வார காலத்தினுள் உடைத்து அகற்றி விடுமாறு சம்பந்தப்பட்டோருக்கு மாநகர சபையினால் பகிரங்க அறிவித்தல் மூலம் உத்தரவிடப்பட்டுள்ளது. இக்கட்டளை உதாசீனம் செய்யப்படுமாயின், மேற்கூறிய பிரிவுகளின்கீழ் சம்பந்தப்பட்டோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு, அபராதம் விதிக்கப்படும் என்பதுடன், அவற்றை அகற்றுவதற்கான செலவுகளும் அறவிடப்படும் என மாநகர சபை அறிவித்துள்ளது.

அத்துடன், கல்முனை மாநகர சபைக்குட்பட்ட வீதிகளில் திருமணம் உள்ளிட்ட வைபவங்களுக்கு கூடாரங்கள் அமைப்பதாயின், மாநகர சபையிடமிருந்து முறையான அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அனுமதி பெறாமல் வீதிகளில் கூடாரங்கள் அமைக்கப்படுமாயின், சம்பந்தப்பட்டோர் மீது சட்டநடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் மாநகர சபை மேலும் அறிவித்துள்ளது.




# கல்முனை - மட்டக்களப்பு பிரதான வீதியில் விபத்து

(அம்பாறை)

சிறிய ரக ரிப்பர் வாகனமும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் மூவர் படுகாயமடைந்த நிலையில் கல்முனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாண்டிருப்பு பிரதான வீதியில் இவ்விபத்து ஏற்பட்டது. இது குறித்து தெரியவருவதாவது:

கல்முனை – மட்டக்களப்பு பிரதான வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிளும் சிறிய ரக ரிப்பர் வாகனமும் நேருக்கு நேர் மோதியே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. கொள்கலன் வாகனம் ஒன்றை முந்திச்செல்ல முயற்சித்தமையினாலேயே இவ்விபத்து இடம்பெற்றதாக நேரில் கண்டவர்கள் குறிப்பிட்டனர்.





இவ்விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் மற்றும் ரிப்பர் வாகனத்தின் சாரதி ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் கல்முனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் நீண்டநாள் தேவையாக இருந்துவந்த டிஜிட்டல் எக்ஸ்ரே தொழில்நுட்ப வசதி கொண்ட கூடம் வைத்தியசாலையின் அத்தியட்சகர் டொக்டர். ஐ.எம். ஜவாஹீரினால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டதை படத்தில் காண்கிறீர்கள்.
(படம்: அக்கரைப்பற்று)

# செப். 15இல் பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய உற்சவம் ஆரம்பம்

(பாண்டிருப்பு)

கிழக்கில் பிரசித்திபெற்ற பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் செப்டெம்பர் 15ஆம் திகதி திருக்கதவு திறத்தல், ஊர் பாதுகாப்பு, கொடியேற்றம் ஆகியவற்றுடன் ஆரம்பமாகவுள்ளது.

மகாபாரதக் கதையை நினைவுகூரும்முகமாக 18 தினங்கள் இந்த ஆலயத்தின் உற்சவம் நடைபெற்றுவருகின்றது. இற்றைக்கு 15ஆம் நூற்றாண்டில் இந்தியாவிலிருந்து வருகை தந்த தாதன் எனும் மாமுனிவனால் ஸ்தாபிக்கப்பட்ட பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலயத்தின் வரலாறும், அற்புதமும் மிகத் தொன்மைவாய்ந்ததாகும். கிழக்கிலுள்ள சக்திமிக்க ஆலயங்களுள் பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலயம் மகிமை வாய்ந்ததாகும்.

இந்த ஆலயத்தின் முக்கிய திருவிழாக்களாக 21ஆம் திகதி சுவாமி எழுந்தருளப்பண்ணல், 22ஆம் திகதி நாட்கால் வெட்டுதல், 26ஆம் திகதி கலியாணக்கால் வெட்டுதல், 30ஆம் திகதி பஞ்சபாண்டவர், திரௌபதை, கிருஸ்ணர், தேவாதிகள் சகிதம் வனவாசம் செல்லல், ஒக்டோபர் 01 ஆம் திகதி அருச்சுனன் தவநிலை செல்லல், 02ஆம் திகதி மாலை ஆலயத்தின் சிகரமாய் விளங்கும் தீ மிதிப்பு வைபவம், 03 ஆம் திகதி பாற்பள்ளையம் ஆகியன நடைபெறவுள்ளன.



இம் முறை கொரோன வைரஸ் தொற்றுக் காரணமாக சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றியவாறே திருவிழா நடைபெறவுள்ளது. அதன்படி உற்சவ நாட்களில் ஆலய வளாகத்தில் கடைகள் வைப்பதற்கு அனுமதியில்லை. அத்துடன், ஆலயத்திற்கு வருகை தரும் பக்தர்கள் முகக்கவசம் அணிந்து சமூக இடைவெளியை பின்பற்றவேண்டும். காவடி, கற்பூரச்சட்டி போன்ற நேர்த்திக்கடன்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது .

ஆலயத்தில் தினமும் அதிகாலை 5 மணிக்கும் மாலை 5 மணிக்கும் விசேட பூசைகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கத்து.



# வடக்கு – கிழக்கில் இனவிகிதாசாரத்திற்கு ஏற்றவாறு பொலிஸாரை நியமிக்கவும்

## ஜனாதிபதியிடம் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் துரைரெட்ணம் கோரிக்கை

( மட்டக்களப்பு)

இலங்கையின் இனவிகிதாசாரத்திற்கு ஏற்றவாறு மட்டக்களப்பு மாவட்டம் உட்பட முழு நாட்டிலும் பொலிஸ் உத்தியோகத்தர்களை நியமிக்குமாறு கோரி முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினரும் பத்மநாபா மன்றம், ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவருமான இரா.துரைரெத்தினம் ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் பொலிஸ் பிரிவை வினைத்திறன் கொண்டதாக மாற்றியமைக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக அறியக் கூடியதாக உள்ளது. இருப்பினும், சிறப்பாக சட்டம், ஒழுங்கு, கொள்கைகளைத் தாங்கி அதை அமுல்படுத்துகின்ற பொலிஸார் பல்லாயிரக் கணக்கானோர் இருந்தாலும் போக்குவரத்துப் பிரிவில் கடமையாற்றுகின்ற ஒருசில பொலிஸாரும் ஏனைய பிரிவுகளில் கடமையாற்றுகின்ற உயர் அதிகாரிகள் தொடக்கம் குறிப்பிட்ட சிலர் தவறுகளை செய்திருப்பதாக பத்திரிகை வாயிலாக அறியக்கூடியதாக உள்ளது.



நீதித்துறையை அமுல்படுத்துவதில் கூடுதலாக பொலிஸாருக்குப் பங்குண்டு. இந்தவகையில் வடக்கு, கிழக்கில் கடமையாற்றுகின்ற பொலிஸார் மொழி தொடர்பான விடயங்களில் பல முரண்பாடுகள் ஏற்படுவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இத்தோடு போக்குவரத்துப் பொலிஸாரினால் வழங்கப்படும் பல வகையான பற்றுச்சீட்டுகள் சிங்கள மொழியில் எழுதப்படுவதனால் அவை தொடர்பான தெளிவு சம்பந்தப்பட்டவருக்குத் தெரியாத நிலையில், சில பொலிஸ் நிலையங்களுக்கு சென்றால்கூட மொழி விடயங்களில் முரண்பாடுகள் ஏற்படுகின்றன. இது தொடர்ச்சியாக நடந்துவருவதனால் மொழி தெரியாத தமிழ் மக்கள் மிகவும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

பொலிஸ் பிரிவை செயற்றிறன் கொண்டதாக மாற்ற முயற்சிக்கும் நீங்கள், வடக்கு, கிழக்கில் தமிழ்ப் பகுதிகளில் குறிப்பாக, மட்டக்களப்பு மாவட்டத்தில் விகிதாசார அடிப்படையில் பொலிஸாரை நியமிக்க நடவடிக்கை எடுத்து குப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் பொலிசாரை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் - என குறிப்பிடப்பட்டுள்ளது.

# மீராவோடையில் இரத்ததான முகாம்

( மீராவோடை)

கல்குடா ஜம்இய்யதுத் தஃவதில் இஸ்லாமியாவின் சமூக சேவைப் பிரிவான தஃவா சமூக நலன்புரிச் சங்கம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியுடன் இணைந்து இரத்ததான முகாமொன்றை நடத்த ஏற்பாடுசெய்துள்ளது.

குறித்த நிறுவனம் வருடாந்தம் நடத்திவரும் இரத்ததான முகாமின் 7ஆவது வருட இரத்ததான முகாம் செப்டெம்பர் 12ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் பி .ப. ஒரு மணி வரை மீராவோடை எம்.பீ.சீ.எஸ். வீதியில் அமைந்துள்ள தாருஸ்ஸலாம் பள்ளிவாசலில் நடத்தவுள்ளது.

மேற்படி மனிதநேய சமூக நல்லிணக்கப் பணியின் பங்காளிகளாக விரும்புகின்றவர்கள் இரத்த தானங்களை வழங்குமாறு ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# போதை மாத்திரைகளை மோட்டார் சைக்கிளில் கொண்டுசென்றவர் கைது!

(அம்பாறை)

69 போதை மாத்திரைகள் அடங்கிய பொதியுடன் மோட்டார் சைக்கிளில் சென்றவர் சாய்ந்தமருதில் வைத்து கைதாகியுள்ளார்.

கடந்த செவ்வாயன்று அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சாய்ந்தமருது பிரதான வீதி வழியே முற்பகல்வேளை சந்தேகநபரொருவர் மோட்டார் சைக்கிளில் சந்தேகத்திற்கிடமாக நடமாடுவதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலொன்றை அடுத்து மாறுவேடம் பூண்டு சென்ற கல்முனை பெருங்குற்றத்தடுப்புப் பொலிஸார் குறித்த சந்தேகநபரை கைதுசெய்துள்ளனர்.

இவ்வாறு 69 போதைமாத்திரையுடன் கைதானவர் 29 வயதுடையவர் எனவும் அண்மைக்காலமாக பாடசாலை மாணவர்களுக்கு குறித்த போதை அடங்கிய மாத்திரைகளை விநியோகித்து வந்துள்ளதாகவும் பொலிஸ் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

மேலும், இச்சுற்றிவளைப்பின்போது கல்முனை பிராந்தியத்துக்கான பொலிஸ் அத்தியட்சகர் புத்திக ஜயசுந்தர மற்றும் கல்முனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுஜித் பிரியந்த ஆகியோரின் வழிகாட்டலில் உப பொலிஸ் பரிசோதகர் வை.அருணன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் இத்தேடுதலில் பங்கேற்றிருந்தனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட 69 போதை மாத்திரைகள் மற்றும் சந்தேகநபர் இந்த போதைமாத்திரைகளை கடத்த பயன்படுத்திய மோட்டார் சைக்கிளை கல்முனை நீதிவான் நீதிமன்றில் பாரப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கல்முனை பொலிஸார் குறிப்பிட்டனர்.

# வீதி நிர்மாணப் பணிக்கு இடைஞ்சலாக உள்ள மின்கம்பங்கள்

(கரடித்தோட்டம் )

ஆழிப்பேரலை அனர்த்தத்திற்குப் பின்னர் காரைதீவு - 10 கிராம அலுவலர் பிரிவில் புதிதாக குடியேறி வாழ்ந்துவரும் மக்கள் போக்குவரத்து செய்வதற்காக அமைக்கப்பட்ட உடையார் வீதியில் மழை காலங்களில் வெள்ளநீர் தேங்கி போக்குவரத்துச் செய்வதில் உள்ள சிரமங்களை கருத்திற்கொண்டு 'சுபிரிகம' கிராம அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இவ் வீதியும் கொங்கிரீட் இட்டு செப்பனிடுவதற்கு தெரிவுசெய்யப்பட்டிருந்தது.




இருந்தும் இவ்வீதிக்கு குறுக்கே நிற்கும் இரண்டு மின் கம்பங்கள் வீதி நிர்மாணப் பணிகளுக்கு தடையாக இருப்பதுடன், இவற்றை அகற்றித் தருமாறு மின்சார சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரை அவை அகற்றப்படாத காரணத்தினால் நிர்மாணப் பணிகளுக்குத் தடங்கல் ஏற்பட்டிருப்பதுடன், வீதி வேலைகளுக்கென அங்கு குவிக்கப்பட்டிருந்த கல், மணல் போன்றவற்றையும் ஒப்பந்தக்காரர் வேறு இடங்களுக்கு இடம்மாற்றியுள்ளார்.

எதிர்வரும் மழை கால சூழலில் வீதிக்குக் குறுக்கே நிற்கும் மின்கம்பங்கள் அகற்றப்பட்டு நிர்மாண வேலைகள் இடம்பெறாவிட்டால் பாடசாலை செல்லும் சிறுவர்கள் உட்பட அனைவரும் வெள்ளத்தில் நீந்திச் செல்ல வேண்டிய நிலைதான் ஏற்படும் என இப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.




# கைக்குண்டு ஒன்றின் மேற்பகுதி மீட்பு

வெடித்த நிலையில் காணி ஒன்றில் காணப்பட்ட கைக்குண்டு ஒன்றின் மேற்பகுதி மீட்கப்பட்டுள்ளது.



அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்லிரைச்சல் -2 பிரதேசத்தில் காணி ஒன்றில் கைக்குண்டு ஒன்று காணப்படுவதாக அப்பகுதி மக்களினால் தகவல் ஒன்று வழங்கப்பட்டிருந்தது.

இதனை அடுத்து சம்பவ இடத்திற்கு இராணுவத்தினர் மற்றும் விசேட அதிரடிப்படையினர் வருகை தந்திருந்ததுடன் குண்டு மீட்கப்பட்டது.

இவ்வாறு மீட்கப்பட்ட குண்டு வெற்று குண்டாக காணப்பட்டதுடன் அது ஏற்கனவே வெடித்திருந்த நிலையில் இருந்ததாக பாதுகாப்பு தரப்பினர் குறிப்பிட்டனர்.

# அரச நிர்வாகக் கட்டமைப்புக்கு உந்துசக்தியாக பட்டதாரி பயிலுனர்கள் திகழவேண்டும்

## – கல்முனை பிரதேச செயலக கணக்காளர் ஹபிபுல்லா

பல்கலைக்கழகங்களில் பட்டங்களைப் பெற்று அரச தொழிலில் காலடி வைத்திருக்கும் பட்டதாரி பயிலுனர்களாகிய நீங்கள் சிறந்த ஆளுமை கொண்டவர்களாகவும், வினைத்திறன் மிக்கவர்களாகவும் அரசாங்கத்தின் கொள்கைகளுக்கும், கோட்பாடுகளுக்கும் உந்துசக்தியாக திகழ்கின்றவர்களாகவும் மாற வேண்டும் - என கல்முனை பிரதேச செயலக கணக்காளர் வை.ஹபிபுல்லா தெரித்தார்.

அண்மையில் பட்டதாரி பயிலுனர்களுக்கான பயிற்சி நிகழ்வொன்றில் வளவாளராக கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்தும் குறிப்பிடுகையில்,

எமது நாட்டின் அரசாங்கம் பல்வேறுபட்ட சவால்களுக்கு மத்தியிலும் நாட்டின் தற்போதைய சூழ்நிலையிலும் கூட சுமார் 50,000இற்கு மேல் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கியிருப்பது என்பது சாதாரணமான விடயமல்ல. எனவே, பயிலுனர்களாக கடமையேற்ற ஒவ்வொரு பட்டதாரிகளும் நாட்டின் நிர்வாகக் கட்டமைப்புக்கு உந்துசக்தியாக



இருப்பதுடன், வினைத்திறன்மிக்கவர்களாவும், சிறந்த ஆளுமையுடையவர்களாகவும் தங்களை வளப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதோடு, எதிர்காலத்தில் அரச போட்டிப் பரீட்சைகளில் தங்களை முழுமையாக தயார்படுத்தி அதில் வெற்றிவாகை சூடவேண்டும்.

மேலும், மக்களின் வரிப்பணத்தில் சம்பளம் பெற்று மக்களுக்காக சேவையாற்ற இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள பட்டதாரி பயிலுனர்களாகிய நீங்கள், மக்களுக்கான அரச சேவையை திருப்திகரமான முறையில் செவ்வனே நிறைவேற்றவேண்டும் என்பதோடு, அரச பணிக்கு வந்துள்ள உங்களுக்கு வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன் - என்றார்.

மேற்படி நிகழ்வில் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜௌபர், நிர்வாக உத்தியோகத்தர் எம்.என்.எம் ரம்சான், நிர்வாக கிராமசேவை உத்தியோகத்தர் யு.எல்.பதுருதீன் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

# கந்தளாய் பிரதேசத்தில் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஒருவர் கைது

(கந்தளாய்)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேசத்தில் பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஒருவரை கடந்த செவ்வாயன்று (8) கைது செய்துள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய், ஜயந்திகம பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய ஒருவரையே கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த சந்தேக நபர் கந்தளாய், கிண்ணியா மற்றும் அக்போபுர, முள்ளிப்பொத்தானை போன்ற பிரதேசங்களில் பல கடைகளை உடைத்து திருடிய குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர் எனவும்

இவர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர் என்பதோடு பல திருட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளதாகவும் தெரிவித்த பொலிஸார் சந்தேக நபர் தொடர்பாக பொலிஸாருக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையிலேயே அவரை கைது செய்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

# பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழு மற்றும் இடைவிலகல் கண்காணிப்புக் குழுக்களை மீளமைத்தல் பற்றிய கலந்துரையாடல்

## கல்குடா வலய கல்வி பணிப்பாளர் தலைமையில் நடைபெற்றது

(வாழைச்சேனை)

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அனுசரணையுடன் மாவட்ட செயலகமும் இணைந்து பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழு மற்றும் இடைவிலகல் கண்காணிப்புக் குழுக்களை மீளமைத்தல் பற்றிய கலந்துரையாடல் நிகழ்வு கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர் தினகரன் ரவியின் தலைமையில் நடைபெற்றது.

பாடசாலை மட்டங்களில் பிள்ளைகளுக்கான கற்றல் சூழலை உறுதிப்படுத்தி பாடசாலைகளில் பிள்ளைகள் தொடர்பாக ஏற்படும் துஷ்பிரயோகங்களை சரியான முறையில் கையாள்வதுடன், அவர்களது அறிவு, திறன், மனப்பாங்குகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் பொருட்டு கல்வியமைச்சினால் வெளியிடப்பட்ட 'சுரக்கும்பவ' சுற்றறிக்கையை செயற்படுத்தும் முகமாக பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்களை அமைத்தலும் அதனை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக கண்காணித்தலும் மற்றும் பாடசாலைக் குழு, கண்காணிப்புக் குழு போன்றவற்றை ஏற்படுத்தி நடைமுறைப்படுத்தல் தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

2016.4.20 இல் வெளியிடப்பட்ட 185ஆம் இலக்க கல்வி கட்டளைச் சட்டத்தின் 37ஆம் பிரிவின்கீழ் அமைக்கப்பட்ட ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்துவதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உத்தியோகத்தர்களின் பங்களிப்பைப் பெற்று வலயக் கல்விப் பணிமனை கல்குடாவினுள் உள்வாங்கப்படும் பாடசாலைகளின் செயற்பாடுகளை வினைத்திறனாக்குவதுடன், முறையான ஆவணங்கள் மற்றும் கண்காணிப்பை நெறிப்படுத்தலைக்கொண்டு இந்தக் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.





பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான திருமதி கங்கேஸ்வரன், திருமதி றிஸ்மியா பானு, மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஏ.பிரபாகர் மற்றும் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள் ஆகியோரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

# 'சிறுவர் சிநேக நகரமயமாக்கல்' வேலைத்திட்டத்தின் கீழ் சிறுவர் பூங்காக்கள் அழகுபடுத்தி கையளிக்கப்பட்டன

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகர சபையினால் முன்னெடுக்கப்படுகின்ற சிறுவர் சிநேக நகரமயமாக்கல் வேலைத்திட்டத்தின்கீழ் மட்டக்களப்பு நகரை அழகுபடுத்தும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன .

இதன்கீழ் மட்டக்களப்பு மாநகர சபையுடன் தன்னார்வ தொண்டு நிறுவனமான யுனிசெப் மற்றும் ஜெரி நிறுவனங்களின் நிதி பங்களிப்புடன் மேற்படி நகரை அழகுபடுத்தும் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன .

அந்தவகையில் மட்டக்களப்பு வாவிக்கரை லகூன் பாக், மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக வளாகத்தில் சிறுவர்களுக்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள சிறுவர் பூங்கா, சிறுவர்களுக்கான விளையாட்டு அரை மற்றும் காந்தி பூங்காவில் வரையப்பட்டுள்ள சிறுவர்களுக்கான விளையாட்டு ஓவியங்கள் ஆகியன கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாநகர பிரதி முதல்வர் கந்தசாமி சத்தியசீலன், தன்னார்வ தொண்டு நிறுவனங்களான யுனிசெப் மற்றும் ஜெரி நிறுவனங்களின் பிரதிநிதிகள், மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கிரிசுதான் ஆகியோர் கலந்துகொண்டனர்.









# சீத்துவக்கேடு 71


காரைக்கவி கந்தையா பத்மானந்தன்

அட மோனை உந்தப் பனங்காய் கன வருத்தங்களுக்கு நல்ல கை கண்ட மருந்து எண்டது கனபேருக்கு விளங்காது. அதிலும் உந்த படிச்ச ஆக்கள் எண்டு சொல்லுறவை சிலருக்கும் உது விளங்கிறதில்லையடா மோனை. அது மட்டுமே பனங்கொட்டை சூப்பிறவையை சரியான இளக்காரமா என்னமோ அரியண்டத்தை பாக்கிறமாதிரி பாப்பினம் கண்டியோ.

பனங்காயில பப்பாளிப்பழம் – மாம்பழத்தை விட கூடுதலாக விட்டமின் சியும் கல்சியமும் நிறைய இருக்காம். பனம்பழச் சாத்தில நீர்ச்சத்து புரதச்சத்து கொழுப்புச் சத்து, உலோக உப்புகள், பிரக்டோஸ், விட்டமின் சி மற்று பீட்டா கரோட்டின் எல்லாம் நிறைய இருக்காம்.

அதிலும் குறிப்பா பார்வைத் திறனை அதிகரிக்கச் செய்யிற விட்டமின் ஏ சத்து இந்தப் பழத்தில் நல்லா நிறைஞ்சு இருக்குது. அதால உந்த எழுத்துக்காரர் பார்வைக் குறைபாடு இருக்கிற ஆக்கள் உந்தப் பனங்காயை சூப்பினால் டாக்குத்தர் மாரிட்ட போகத் தேவையில்லை கண்டியோ எண்டுவார் அப்பு.

அதமாதிரி பனங்காய் உடம்புக்குத் தேவையான சூட்டைக் குடுக்கும். அதோட நோய் எதிப்புச் சக்தியைக் கூட்டுமாம். மலச்சிக்கலுக்கு திறமான சாமான் உடம்பில உள்ள எல்லாக் கழிவுகளையும் வெளியில தள்ளிவிடும் எண்டு எங்கட பரியாரிமார் சொல்லுவினமடா மோனை எண்டுவார் அப்பு.

அதமாதிரி உந்த பனங்காய் களியை எடுத்து தோலிலை பூசினா தேமல் இருந்த இடம் தெரியாமல் ஓடிபோகும் கண்டியோ எண்டுவார். மற்றப் பழங்கள் மாதிரி இல்லாமல் உந்த கோதாரி வருத்தம் சலரோகம் உள்ளவை பயப்பிடாம பனங்காய் சாப்பிடலாம் கண்டியோ.

முந்தி அந்தக் காலத்தில தேரையர் எண்டொரு சித்தர் இருந்தவர். அவர் உந்த ஆயுள்வேத மருத்துவத்தில சரியான விண்ணன். அதிலும் தாவரங்களை வைச்சு வைத்தியம் செய்தே கன வருத்தங்களை மாத்தினவர் கண்டியோ. அவர் பதார்த்த குண சிந்தாமணி எண்டு ஒரு வைத்தியப் புத்தகம் எழுதினவர்.

உந்தப் புத்தகத்தில அவர் தாவரங்களின்ரை ஒவ்வொரு பொருளிலும் என்ன மாதிரியான மருத்துவ குணங்கள் இருக்கெண்ட விசயத்தை விலாவரியா சொல்லி இருக்கிறார்.

வேர், பட்டை, பிசின், சாறு, இலை, பூ, காய், விதை எண்ட எட்டுப் பொருள்களையும்தான் அவர் பதார்த்தம் எண்டு சொல்லுறார்.

இதுகள் கசப்பு, உவர்ப்பு, இனிப்பு, கார்ப்பு, புளிப்பு, துவர்ப்பு எண்ட அறுசுவையையும் தங்கட குணமாகக் கொண்டிருக்கும் அதுக்கேத்தமாதிரி கன வருத்தங்களை அதுகள் மாத்தும். அதே நேரம் ஒரு பதார்த்தத்தை அடிக்கடி சாப்பிட்டால் என்ன மாதிரியான கோளாறுகள் வரும் எண்டும் உவர் சொல்லுறார் கண்டியோ எண்டுவார் அப்பு.

இப்பியான உந்தப் புத்தகத்தில தேரையர்

"நாளும் பனம் பழத்தை நல்லமுதா யுண்ணுங்கா

லாளுங்க கரப்பா நழுகிரந்தி நீளு மலஞ்சு

சிக்கும்பித் தத்தில்வலி சேருதல்

நோய்க்கமமு

தித்திக்கும் பலக்குமெனச் செப்பு" எண்டு பனங்காயை ஒவ்வொருநாளும் சூப்பினால் கரப்பான், அழுகிய சிரங்கு, மலபந்தம், பித்த வாயுவால வாற வருத்தங்கள் வரும் எண்டு சொல்லுறார்.

அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சதாமோ. அதால தேரையர் சொல்லுறமாதிரி ஒவ்வொருநாளும் அளவுக்கு மிஞ்சி பனங்காயை சூப்பாமல் அளவோட சூப்பினம் எண்டால் உடம்புக்கு நல்லம் கண்டியோ. என்னண்டாலும் நான் நினைக்கிறன் உந்த மாடுகள் எல்லாம் உப்பிடி நிறைய பனங்காய் சாப்பிடுறதால தான் அதுகளுக்கு ஒரு வருத்தமும் வாறதில்லை. நல்ல உசாரா இருக்குதுகள் எண்டுவார் அப்பு.

உந்தப் பனங்காயை பற்றி சொல்லேக்கை ஒரு விசயத்தை மறந்துபோனனடா மோனை. சில பனங்காயளிலை மூண்டு கொட்டை இருக்கும். அதை 'முக்காழி' எண்டுறவை. அதமாதிரி ரெண்டு கொட்டை இருக்கிறதை 'இருகாழி' எண்டுறவை. அதமாதிரி ஒரு கொட்டை இருக்கிறதை 'ஒருகாழி' எண்டுறவை. அதமாதிரி ஒண்டுக்கும் உதவாத சூம்பின கொட்டை உள்ள பனங்காயை 'சொத்தை' எண்டுறவை எண்டுவார் அப்பு.

அண்டைக்கு நான் எங்கட ஆக்கள் பனங்காயின்ரை டேஸ்ட்டை வைச்சு – மணத்தை வைச்சு பனையளுக்கு பேர் வைச்சவை எண்டு சொன்னனான் எல்லே சிலதுகளை உனக்கு சொல்ல மறந்து போட்டன் கண்டியோ.

பனங்காயில கற்பூர வாசம் வந்தால் பனைக்கு கற்பூரப் பதலி எண்டும் உந்த வேலியிலை நிக்கிற கிளுவையின்ரை மணம் வந்தால் கிளுவங்காச்சி எண்டும் சொல்லுறவை. அதமாதிரி மாம்பழம் மாதிரி டேஸ்டா இருந்தா மாம்பழச்சாறி எண்டும் கரும்பு மாதிரி இருந்தால் கரும்பி எண்டும் சொல்லுறவை.

அதமாதிரி பனங்காயின்ரை வடிவத்தை வைச்சும் ஆக்கள் பனையளுக்கு பேர் வைச்சவையடா மோனை எண்டுவா ஆச்சி. வாழைப்பழம் மாதிரி இருந்தா வாழைக்காச்சி எண்டும் உன்ரை கொப்புவின்ரை பானை வயிறு மாதிரி இருந்தால் முடாக்காச்சி எண்டும் கொக்கச் சத்தகம் மாதிரி வளைஞ்சு போய் இருந்தால் குடவனகாச்சி எண்டும் வட்டமா இருந்தால் வட்டக்காச்சி எண்டும் சொல்லுறவை.

பனங்காயின்ரை நிறத்தை வைச்சும் பனையளுக்குப் பெயர் வைச்சிருக்கினம் கண்டியோ.

வெள்ளையும் மஞ்சளும் கலந்து இருந்தால் தொரைச்சி எண்டும் கருப்பா இருந்தால் கருப்பச்சி எண்டும் பெரும்பகுதி கருப்பாகவும் கொஞ்சம் வெள்ளையாயும் இருந்தால் தொரைக்கருப்பை எண்டும் பெரும் பகுதி வெள்ளையும் மஞ்சளும் கொஞ்சம் கருப்பாகவும் இருந்தால் கருப்பைத் தொரை எண்டும் நரியின்ரை நிறமாய் இருந்தால் நரிக்காச்சி எண்டும் வெள்ளையா இருந்தால் வெள்ளை நாச்சி எண்டும் சொல்லி இருக்கினம்.

அதமாதிரி உந்த சண்டை நடந்த நேரம் சவக்காரத்துக்கு ஊரில பெரிய தட்டுப்பாடு வந்தது அப்ப எங்கட ஆக்கள் உந்தப் பனங்களியைத்தான் கொஞ்சம் குளோரினும் கலந்து சவுக்காரமாப் பாவிச்சவை. உதில என்ன பிரச்சினை எண்டால் பள்ளிக்கூடப் பெடி பெட்டையளின்ரை வெள்ளை உடுப்பு எல்லாம் மங்களகரமா மஞ்சள் நிறத்தில்தான் இருக்கும்.

அதுமட்டுமே தோச்சு காயப் போட்ட உடுப்புகளை பனங்காய் வாசத்துக்கு மாடுகள் வந்து உருவித் திண்டு போடும். உதால கனபேர் உடுப்பைக் காயப் போட்டுப் போட்டு காவல் இருந்தவை எண்டுவா ஆச்சி.

உப்பிடித்தான் ஒருநாள் உன்ரை கொப்பு உப்பிடி பனஞ்சவுக்காரம் போட்ட நாலு முழ வேட்டியைக் கட்டிக்கொண்டு சந்தியில நிண்டு கந்தப்பிள்ளை வாத்தியாரோட அரசியல் கதைச்சுக் கொண்டு நிக்க பின்னால போன மாடு ஒண்டு அவற்றை வேட்டியை உருவிக்கொண்டு போட்டுது. நல்ல வேளை கோமணம் கட்டி இருந்ததால மானம் கொஞ்சம் என்டானை பிழைச்சுப் போச்சுது.

பிறகு என்ன அரசியல் பேசப் போய் கடைசியல கோமணமாவது மிஞ்சிச்சே எண்டுகொண்டு கொப்பு ஒருமாதிரி வீட்டை வந்து சேர்ந்தார். அதுக்குப் பிறகு உவர் உந்த பனங்காய் போட்டு வேட்டி தோய்க்கிறதை விட்டுப் போட்டார். அதோட எங்கயும் வெளியில போகேக்கை இடுப்பில வேட்டிக்கு மேல பெல்லிய பனை நார் சுத்திக் கட்டிக்கொண்டுதான் போவார். அதமாதிரி அப்ப பனங்களியிலை பற்பசை ஒண்டும் செய்தவங்கள் தீட்டின பிறகு வாயிலை இருந்து பனங்காய் நாத்தம் தான் வரும். உதில பகிடி என்னண்டால் பனங்கொட்டை சூப்பிறவையைப் பகிடி பண்ணின டவுன் ஆக்களும் உந்தப் பற்பசையைப் பாவிச்சு பல்லுத் தீட்டிப் போட்டுகாவிப் பல்லோட பனங்காய் நாத்தத்தோடதான் திரிஞ்சவை எண்ட ஆச்சி அட மோனை ஒரு விடுகதை சொல்லுறன் விடை சொன்னி எண்டால் இண்டைக்கு உனக்கு பனங்காய் காய் சுட்டுத் தருவன் எண்டுவா .

என்னணை சொல்லன் எண்டதும் தொப்பென்று விழுந்தான் தொப்பிகழண்டான் அவன் ஆர் எண்டுவா உடன உது பெரிய விசயமே பனங்காய் தான் எண்டு நான் சொன்னதும் ஆச்சி குசினியுக்கை பனங்காய் காய் சுடப் போவா.

(தொடரும்)



# நகைச்சுவை நடிகர் வடிவேல் பாலாஜி காலமானார்



திறமையான நகைச்சுவை நடிகராகத் தமிழ் ரசிகர்கள் மத்தியில் புகழ் பெற்றிருந்த வடிவேல் பாலாஜி தனது 45ஆவது வயதில் நேற்று காலமானார்.

கலக்கப்போவது யாரு உள்ளிட்ட பல தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்றதன் மூலம் புகழ்பெற்றவர் வடிவேல் பாலாஜி. நகைச்சுவை நடிகர் வடிவேலுவின் பாணியைப் பின்பற்றி நடித்ததால் அதிகமானோரின் கவனத்தை ஈர்த்தார். சில திரைப்படங்களிலும் அவர் நடித்துள்ளார். அவருக்கு மனைவி, ஒரு மகன், மகள் உள்ளார்கள்.

மறைந்த வடிவேல் பாலாஜியின் மறைவுக்குத் திரையுலகினர் பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

பாலாஜி உடல்நலக்குறைவாக இருந்தது குறித்து எந்தத் தகவலும் வெளிவராத நிலையில், திடீரென அவர் மறைந்தது குறித்து ரசிகர்கள் மட்டுமல்லாமல் திரையுலகினரும் அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்துள்ளார்கள்.

இரு வாரங்களுக்கு முன்பு தொலைக் காட்சி நிகழ்ச்சியின் படப்பிடிப்பில் இருந்தபோது வடிவேல் பாலாஜிக்கு மயக்கம் ஏற்பட்டுள்ளது. உயர் இரத்த அழுத்தம் காரணமாக மூளையில் தாக்கம் ஏற்பட்டதால் உடனடியாகத் தனியார் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். சிகிச்சைக்குப் பின்னர் பாலாஜி சில தினங்களுக்கு முன்னர் வீடுதிரும்பியிருந்தார். இந்நிலையில், அவருக்கு மீண்டும் மயக்கம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் உடனடியாக சேர்க்கப்பட்டுள்ளார் பாலாஜி. அங்கு தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டது. இந்நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை மரணமடைந்துள்ளார்.

★ குடியிருப்புகள் முழுவதும் தீக்கிரை
★ 13,000 பேர் நிர்க்கதி

# ஐரோப்பாவின் மிகப்பெரிய அகதிகள் முகாமில் பயங்கரத் தீ







கிரீஸிலுள்ள ஐரோப்பாவின் மிகப்பெரிய அகதிகள் முகாமில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இதனால் 13 ஆயிரம் பேர் தங்குமிடத்தை இழக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

உள்நாட்டுப் போர், பயங்கரவாதம், பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மக்கள் அகதிகளாக மாறியுள்ளனர். இவர்களை ஐரோப்பிய நாடுகள் தங்கள் நாட்டின் எல்லையிலேயே பிடித்து முகாம்களில் தங்கவைத்துள்ளன. கிரீஸின் லஸ்போஸ் தீவின் மொரியா நகரில் அமைந்துள்ள இந்தக் குடியிருப்புப் பகுதியில் 13 ஆயிரம் அகதிகள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், இந்த அகதிகள் குடியிருப்புப் பகுதியில் நேற்றுமுன்தினம் அடுத்தடுத்து பயங்கர தீவிபத்து ஏற்பட்டது. குடியிருப்பில் வசித்து வந்த அகதிகள் சிலர் வேண்டுமென்றே திட்டமிட்டு இந்த தீ விபத்தை ஏற்படுத்தியிருக்கலாம் என குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இந்த தீ விபத்தால் அகதிகள் குடியிருப்புகள் முழுவதும் தீக்கிரையாகி முற்றிலும் அழிந்துவிட்டன. தீ விபத்தால் அகதிகள் முகாம்களில் தங்கியிருந்த 13 ஆயிரம் பேர் தங்கள் குடியிருப்பை இழந்துள்ளனர்.

## சின்னம்மா விரைவில் 'ரிலீஸ்': அ.தி.மு.கவுக்குள் மாற்றம் வருமா?



சொத்துக்குவிப்பு வழக்கில், நான்காண்டு சிறைத் தண்டனை பெற்ற சசிகலா, கர்நாடக மாநிலம், பெங்களூர், பரப்பன அக்ரஹார சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் சலுகைகள் அடிப்படையில் அவர் விரைவில் விடுதலையாகவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அவருக்கு நீதிமன்றம் விதித்த அபராதத் தொகை 10 கோடி ரூபாவை செலுத்தி அவரை விரைவாக சிறையிலிருந்து வெளியில் அழைத்து வர, அவரது வழக்கறிஞர்கள் நடவடிக்கை எடுத்துவருகின்றனர்.

இம்மாதத்துடன் 43 மாதங்கள் சிறை வாசத்தை முடிக்கிறார் சின்னம்மா சசிகலா. அதனடிப்படையில், 129 நாட்கள் தண்டனை குறைப்பு வரும். பரோலில் வந்து, 17 நாட்கள் கழித்து, சிறை விதிகளின் அடிப்படையில் இம்மாத இறுதியில் அவர் வெளியே வருவதற்கு,அதிகமான வாய்ப்புகள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறையிலிருந்து இம்மாத இறுதியில் சசிகலா வெளியே வந்த பிறகு அ.தி.மு.க.வில் மாற்றம் இருக்குமா, அதற்கு முதல்வர் இ.பி.எஸ். ஒப்புக்கொள்வாரா என்பது விரைவில் தெரியவரும்.







# கொரோனா பாதிப்பு குறித்து எனக்கு அப்போதே தெரியும்!

"கொரோனா வைரஸ் பாதிப்பு குறித்து தமக்கு ஆரம்பத்திலேயே தெரிந்திருந்தும் அதனை பெரிதுபடுத்தி பதற்றத்தை அதிகரிக்க எண்ண வில்லை என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

தம்மை பற்றி விமர்சித்து எழுதப்பட்ட புத்தகத்திற்கு பதிலளித்த ட்ரம்ப், நான் இந்த நாட்டின் உற்சாகத்தை கூட்டும் தலைவன். நான் நேசிக்கும் நாட்டின் மக்கள் அச்சமடைவதை விரும்பவில்லை.

இந்த நாட்டை பலவீனப்படுத்த தாம் விரும்பவில்லை என்றும் துணிவுடன் பிரச்சினைகளை எதிர்கொள்ள விரும்பியதாகவும் அமெரிக்கர்கள் ஒன்றுகூடி தங்கள் பலத்தை காட்ட வேண்டும் என்று எண்ணியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



கலிபோர்னியாவில் ஏற்பட்டுள்ள காட்டுத்தீயால் 20 இலட்சம் ஏக்கர் பச்சைப் பசேல் வனப்பகுதி எரிந்து நாசமாகி இருக்கிறது. மேலும், இந்த காட்டுத் தீயால் சென் பிரான்சிஸ்கோவின் அனைத்து பகுதிகளும் செம்மஞ்சள் நிறமாக காட்சி தருகின்றன.

# பெய்ரூட்டில் மீண்டும் தீ

லெபனான் தலைநகர் பெய்ரூட் துறைமுகத்தின் எண்ணெய் மற்றும் டயர் கிடங்கில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் 4ஆம் திகதி பெய்ரூட் நகரில் ஒரு கிடங்கில் வைக்கப்பட்டிருந்த 2,750 தொன் அமோனியம் நைட்ரேட் என்ற வெடி மருந்து வெடித்தது. உலகையே உலுக்கிய இந்த வெடிவிபத்தில் 190 பேர் உயிரிழந்ததுடன், 6,500 பேர் படுகாயமடைந்தனர். 3 இலட்சம் பேர் நிர்க்கதிக்குள்ளாகினர்.

இந்நிலையில், மீண்டும் டயர் மற்றும் எண்ணெய் வைக்கப்பட்டு இருந்த கிடங்கில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தீ விபத்துக்கான காரணம் தெரியாத நிலையில், தீயை அணைக்கும் பணியில் தீயணைப்பு வீரர்கள் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர். விபத்து நடந்த பகுதி முழுவதும் புகை மண்டலமாக காட்சியளிக்கிறது. தீ விபத்தில் ஏற்பட்ட உயிர்சேதம், பொருட்சேதம் பற்றிய தகவல்கள் (பத்திரிகை அச்சுக்குச் செல்லும்வரை) வெளியாகவில்லை.



# அவுஸ்திரேலியாவுடன் மோதும் இங்கிலாந்து ஒருநாள் குழாம்



இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ள மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடருக்கான இங்கிலாந்து அணியின் 14 பேர் கொண்ட குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஆஸி. இருபதுக்கு இருபது தொடரில் தவறவிடப்பட்ட இங்கிலாந்து அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஜேசன் ரோய் மீண்டும் அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் நிறைவுற்ற பாகிஸ்தான் அணிக்கு எதிரான இருபதுக்கு இருபது தொடரில் இங்கிலாந்து குழாமில் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஜேசன் ரோய் இடம்பிடித்திருந்தார். அவ்வேளையில் உபாதை காரணமாக குழாமிலிருந்து விலகினார். அதன்பின் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இருபதுக்கு இருபது தொடரில் விளையாடவில்லை.

அவுஸ்திரேலிய அணியுடனான தொடரில் அதிகபட்ச ஓட்டங்களைக் குவித்த வீரராக இடம்பிடித்து, இருபதுக்கு இருபது துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசையில் பாகிஸ்தான் அணித்தலைவர் பாபர் அஸாமை பின்தள்ளி முதலிடம் பிடித்த டேவிட் மாலன் மேலதிக வீரர்களில் ஒரு வீரராக குழாமில் இணைக்கப்பட்டுள்ளார்.

இயன் மோர்கன் தலைமையிலான இங்கிலாந்து ஒருநாள் குழாமில், மொயின் அலி, ஜொப்ரா ஆர்சர், ஜொனி பெயர்ஸ்டே, டொம் பெண்டன், சேம் பில்லிங்ஸ், ஜொஸ் பட்லர், சாம் கர்ரன், டொம் கர்ரன், ஆதில் ரஷீட், ஜோ ரூட், ஜேசன் ரோய், கிறிஸ் வோக்ஸ் மற்றும் மார்க் வுட் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். மேலதிக வீரர்களாக டேவிட் மாலன், பில் சால்ட் மற்றும் ஷாகிப் முஹமட் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இரு அணிகளுக்குமிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரின் முதல் போட்டி இன்று மென்செஸ்டரில் ஆரம்பமாகிறது.

# கல்முனை பிரதேச செயலக வருடாந்த போட்டியின் உதைபந்தாட்ட போட்டியில் மருதமுனை ஒலிம்பிக் கழகம் சம்பியனானது




(எம்.என்.எம்.அப்ராஸ்)

ஆம் ஆண்டுக்குரிய கல்முனை பிரதேச செயலக விளையாட்டுப் போட்டியின், உதைபந்தாட்ட போட்டியின் இறுதிப் போட்டியானது கல்முனை பிரதேச செயலக கணக்காளர் அல்ஹாஜ் வை. ஹபிபுல்லா தலைமையில் கடந்த சனிக்கிழமை கல்முனை சந்தாங்கேணி ஐக்கிய மைதானத்தில் நடைபெற்றது.

மாபெரும் இறுதிப் போட்டியில் முன்னணி கழகங்களான கல்முனை சனிமௌன்ட் மற்றும் மருதமுனை ஒலிம்பிக் ஆகிய கழகங்கள் மோதின. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் 2-0 என்ற கோல்கள் கணக்கில் மருதமுனை ஒலிம்பிக் விளையாட்டுக் கழகம் கல்முனை பிரதேச செயலக 2020ஆம் ஆண்டுக்குரிய உதைபந்தாட்ட சம்பியனானது.

இந்த உதைபந்தாட்ட இறுதி நிகழ்வில் பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அல்ஹாஜ் எச்.எம்.எம். ஹரீஸ் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

மேலும் கௌரவ அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக செயலாளர் சட்டத்தரணி ஏ.எம்.அப்துல் லத்தீப் கலந்து கொண்டதுடன், விசேட அதிதிகளாக பலரும் கலந்துகொண்டனர்.

# கபடி பயிற்றுவிப்பாளர்களாக நிந்தவூரிலிருந்து 14 பேர் தெரிவு

(சுலைமான் றாபி)

இலங்கை கபடி சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட கபடி பயிற்றுவிப்பாளர் தரப்படுத்தல், புதிய பயிற்றுவிப்பாளர் பதிவு மற்றும் தேசிய அணிக்கான பயிற்றுவிப்பாளர் தெரிவுகளில் நிந்தவூர் பிரதேசத்திலிருந்து 14 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் டங்கன் வைட் கேட்போர் கூடத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நேர்முகப்பரீட்சை மற்றும் பயிற்றுவிப்பாளர் தரப்படுத்தலில் ‘A’ தரத்திற்கு நான்கு பேரும், ‘D’ தரத்திற்கு 10 பேரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இதில் அம்பாறை மாவட்ட கபடி பயிற்றுவிப்பாளர் ஏ.எல்.அனஸ் அஹமட், இலங்கை கபடி சம்மேளனத்தின் உப தலைவரும், அம்பாறை மாவட்ட கபடி சம்மேளனத்தின் செயலாளரும், கல்முனை சாஹிரா கல்லூரியின் ஆசிரியருமான எஸ்.முஹம்மட் இஸ்மத், தேசிய கபடி அணி வீரரும், பாடசாலை விளையாட்டு பயிற்றுவிப்பாளருமான எம்.ரி.அஸ்லம் சஜா, உடற்கல்வி ஆசிரியர் ஏ.ஹலீம் அஹ்மத் ஆகியோர் ‘A’ தரத்திற்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மேலும் ‘D’ தரத்திற்கான 10 புதிய பயிற்றுவிப்பாளர்களும் தெரிவுசெய்யப் பட்டதுடன், அவர்களுக்கான அடையாள அட்டை மற்றும் சான்றிதழ்களும் மேலங்கிகளும் வழங்கப்பட்டன.





T TEN LEAGUE

# இலங்கையில் –0 கிரிக்கெட் லீக்

இலங்கை கிரிக்கெட் சபையானது ‘லங்கன் பிரிமியர் லீக்’ என்ற பெயரில் இருபதுக்கு இருபது லீக் தொடரை அறிமுகம்செய்துள்ள நிலையில், தற்போது 10 ஓவர்கள் லீக் தொடரையும் அறிமுகம்செய்கிறது.

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெறவிருந்த ‘லங்கன் பிரிமியர் லீக்’ தொடரானது கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக அரசால் விதிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு விதிமுறைகளின் அடிப்படையில் வெளிநாட்டு வீரர்களை தனிமைப்படுத்துவதிலுள்ள காலச்சிக்கல் காரணமாக நவம்பர் மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில், எதிர்வரும் டிசம்பர் மாதம் 10 ஓவர்கள் T-10 கிரிக்கெட் லீக் தொடரை நடத்த இலங்கை கிரிக்கெட் சபை திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எட்டு அணிகள் பங்கேற்கும் குறித்த T-10 லீக் தொடரில் ஒவ்வொரு அணிகளும் தலா ஆறு வெளிநாட்டு வீரர்களை ஏலத்தில் கொள்வனவுசெய்ய அனுமதி வழங்கப்படும். போட்டிகள் அனைத்தும் இரண்டு மைதானங்களில் நடைபெறவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆனால், பங்குபற்றும் அணிகளின் பெயர்கள், போட்டிகள் நடைபெறும் மைதானங்களின் பெயர்கள் என்பன வெளியிடப்படவில்லை.






*கொரோனா வைரஸ் சவாலுக்கு மத்தியில் மூடிய மைதானத்தில் இலங்கை மண்ணில் இலங்கை கிரிக்கெட் அணியுடன் நடைபெறவுள்ள உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் டெஸ்ட் தொடருக்காக, பங்களாதேஷ் கிரிக்கெட் அணி நேற்று முன்தினம் (09) ஷர்-ஈ பங்களா தேசிய கிரிக்கெட் மைதானத்தில் பயிற்சி களை ஆரம்பித்தது.*








# யுபுனுக்கு மும்மொழிகளிலும் வாழ்த்திய நாமல்

ஜேர்மனியில் தற்சமயம் நடைபெற்றுவரும் சர்வதேச டிஸ்ஸவ் மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் போட்டித் தொடரில் நடைபெற்ற ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டத்தில் இலங்கையைச் சேர்ந்த குறுந்தூர ஓட்ட வீரரான யுபுன் ப்ரியதர்ஷன அபயகோன் 10.16 செக்கன்களில் ஓடிமுடித்து முதலிடம் பெற்று, தேசிய மற்றும் புதிய தெற்காசிய சாதனை படைத்தார்.

இந்நிலையில், சாதனை படைத்த யுபுன் ப்ரியதர்ஷன அபயகோனுக்கு விளை யாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மும்மொழி களிலும் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

“ஜேர்மனியில் நடைபெற்ற தடகள போட்டியில் யுபுன் அபேகோன், ஆண்களுக்கான 100 மீட்டர் ஓட்டப்பந்தயத்தை 10.16 விநாடிகளில் நிறைவுசெய்து இலங்கை மற்றும் தெற்காசிய மட்டத்தில் சாதனை படைத்தமை குறித்து செய்தி அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். இந்தச் சாதனை இலங்கையர்கள் என்ற அடிப்படையில் அனைவரையும் பெருமை யடையச் செய்துள்ளது. வாழ்த்துகள்” என நாமல் ராஜபக்ஷ வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.


Namal Rajapaksa
ஜேர்மனியில் நடைபெற்ற தடகள போட்டியில் யுபுன் அபேகோன், ஆண்களுக்கான 100 மீட்டர் ஓட்டப்பந்தயத்தை 10.16 வினாடிகளில் நிறைவுசெய்து இலங்கை மற்றும் தெற்காசிய மட்டத்தில் சாதனை படைத்தமை குறித்து செய்தி அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். இந்த சாதனை இலங்கையர்கள் என்ற அடிப்படையில் அனைவரையும் பெருமையடைய செய்துள்ளது. வாழ்த்துக்கள்
Absolutely thrilled with the news that the Sri Lankan sprinter Yupun Abeykoon has set a NEW Sri Lanka/South Asia #record in men's 100m (10.16 sec) in Germany. What an impressive achievement! What a #proud moment for #SriLanka
#Congratulations
Credit: imago images
See Translation


# திரித்துவக் கல்லூரி – சென். பீட்டர்ஸ் கல்லூரி பழைய மாணவர் அணிகள் இணைச்சம்பியன்

(கண்டி)

திரித்துவக் கல்லூரி பழைய மாணவர் சவால் கேடயத்திற்காக நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் திருத்துவக் கல்லூரி பழைய மாணவர் அணியும், சென். பீட்டர்ஸ் கல்லூரி பழைய மாணவர் அணியும் இணைச் சம்பியன்களாயின.

கண்டி பல்லேகலையில் நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் தலா ஒரு கோல் வீதம் அடித்து 1-1 என்ற நிலையில் போட்டி சமநிலையில் முடிந்தன. இதன் காரணமாக இரு அணிகளும் இணைச்சம்பியன்களாக அறிவிக்கப்பட்டன.

சென். பீட்டர்ஸ் பழைய மாணவர் அணித் தலைவர் எம்.நசீம் மற்றும் திருத்துவக் கல்லூரி பழைய மாணவர் அணித்தலைவர் சனூஜ் சிரந் ஆகியோர் இணைந்து கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டனர்.



Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7